# இறையியல் கோலங்கள்

வடிவம் 22 பங்குனி, ஜூன் 2009 வண்ணம் 1,2

## தூய பவுல் – II

பவுலின் பார்வையில் நிறைவு கால இயல்

பவுலின் நற்செய்திப் பணியில் பெண்கள்

பவுலின் மடல்களில் கிறிஸ்தவ ஒழுக்கவியல்

பவுலின் தூதுரைப் பயணங்கள்

தூய பவுல் மறையறிவிப்பில் கையாண்ட நுட்பங்கள்

பவுலின் ஆன்மீகம்

இவ்விதழின் இறையியலாளர்

To:
Rev. Fr. S.J. Rajanayagam
Director, 'Ahavoli'
St. Patrick's Road
Jaffna

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL


Vol : 22
No. : 1,2
March, June : 2009

வடிவம் : 22
வண்ணம் : 1,2
பங்குனி , ஜூன் : 2009



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

ஆசிரியர்: அருட்தந்தை மை.ஆ.போ.ற.சவுந்தரநாயகம்

துணை ஆசிரியர்கள்: அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம்
அருட்தந்தை அ.யோ.ஜெயசீலன்

நிர்வாகக்குழு: அருட்சகோ. கீ.லக்ஸ்மன்
அருட்சகோ. ப.றெனாட் செறில்நெஸ்
அருட்சகோ. பெ.சதீஸ்குமார்
அருட்சகோ. தி.குயின்சன் பெனாண்டோ
அருட்சகோ. ப.பத்திநாதர்
அருட்சகோ. ச.விமலசேகரன்

வெளியீடு: தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Editor: Rev.Fr.M.A.P.R. Savundranayagam

Sub Editors: Rev. Fr. P.J. Jeberatnam
Rev. Fr. A.J. Jeyaseelan

Administrative Board: Rev. Bro. K.Luxman
Rev. Bro. P.Renard Cherilnes
Rev. Bro. B.Satheeskumar
Rev. Bro. T.Quinson Fernando
Rev. Bro. P. Pathinathar
Rev. Bro. S. Vimalasekaran

Publication: St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel. No.: 021 222 2482, 021 222 7145

# உள்ளே


◈ ஆசிரியர் உரை

◈ தூய பவுலின் பார்வையில் நிறைவு கால இயல்

அருட்பணி சில்வஸ்ரதாஸ்

◈ பவுலின் மடல்களில் பெண்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம்

அருட்சகோதரி-அஞ்சலினா A.C

◈ கிறிஸ்தவ ஒழுக்கவியலின் ஊற்றும் இரத்தினச் சுருக்கமும்: இறையன்பும் பிறரன்புமாகும்

அருட்தந்தை மைக்கல்சவுந்தரநாயகம்

◈ பவுலும் பயணங்களும்

அருட்பணி அ.மில்பர்

◈ புனித பவுல் மறையறிவிப்பில் கையாண்ட நுட்பங்கள்

அருட்சகோதரன். ஜே. எல்மோ அருள்நேசன்

◈ பவுலின் ஆன்மீகம்

அருட்சகோதரன். தி. குயின்சன் பெர்னான்டோ

◈ புனித சியென்னா கத்தரீனம்மாள்

அருட்சகோதரன் ப.பத்தினாதர்

◈ **SYNOPSIS**

◈ திருச்சபை வரலாற்றுத் துளிகள்

# ஆசிரியர் உரை

தூய பவுல் அடியாருடைய வாழ்வும், அழைப்பும், பணியும் இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு பின்னும் எமக்கு மிகுந்த அர்த்தம் உள்ளதாய் விளங்குவதை, திருச்சபையில் தலைமைத்துவ பணியில் ஈடுபட்டிருக்கிறவர்கள் மாத்திரம் அல்லாமல், இறைமக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள அவரது பிறப்பின், இந்த இரண்டாயிரமாம் யூபிலி ஆண்டு துணை புரிந்துள்ளது.

இந்த இதழின் ஆக்கங்கள் நம் எல்லோருக்கும் அவசியமான, தூய பவுலிலே விளங்கிய கிறிஸ்துவின் நற்செய்தியைப் பற்றிய அறிவிலும், அதை பிறரோடு பகிர்ந்து கொள்ள அவசியமான பணி ஆர்வத்திலும், வளர உதவும் என்பது எனது நம்பிக்கை.

“நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு” என்று நற்செய்தியின் தூதுவனாக அவர் மேற்கொண்ட தூதுரைப் பயணங்களும், மறை அறிவிப்பிற்காக அவர் கையாண்ட நுட்பங்களும், கிறிஸ்துவின் விழுமியங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய அவருடைய ஆன்மீக ஆழமும், கத்தோலிக்க ஒழுக்கவியல் சார்ந்த அவருடைய ஆழமான படிப்பினைகளும் திருச்சபையின் அனைத்து நிலையினருக்கும் சவாலாக அமைந்துள்ளது.

எனவே தூய பவுலின் பாதையில் ஒப்பற்ற செல்வமாகிய கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள, தூய பவுலைப் போல தூய ஆவியின் வழிநடத்துதலிலே பயணித்து, வெற்றிவாகைக்குரிய பரிசை எமதாக்குவோம்.

போக்குவரத்து வசதிகளும் உலகளாவிய சமூகத்தொடர்பு சாதனங்களும் அதீத வளர்ச்சியை அடைந்துள்ள இந்தக் காலத்தில் வாழும் நாம், இவற்றை எவ்வளவுக்கு சிறப்பாகப் பயன்படுத்தி கிறிஸ்துவைப் பகிர்ந்து கொள்ள முனைப்பாக ஈடுபட்டுள்ளோம் என்ற கேள்வியைக் கேட்டு, நற்செய்தி அறிவிப்பிலே இன்னும் அதிகமாக எம்மைத் தியாகம் செய்து ஈடுபட தூய பவுலின் வாழ்வு எம்மை தூண்டிவிடவேண்டும் என்று ஆசித்து நிறைவு செய்கிறேன்.

Fr. M.A.P.R. Soundranayagam

# தூய பவுலின் பார்வையில் நிறைவு கால இயல்



அருட்பணி சில்வஸ்ரதாஸ்

தூய பவுல் நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றி தனது திருமுகத்தில் குறிப்பிடுவதை நாம் பழைய ஏற்பாட்டு பின்னணியில் தான் விளங்கிக் கொள்ள முடியும். ஒருவர் கொண்டிருக்கும் விசுவாசப் போதனையின் அடிப்படையில்தான் அவர் கூறுவதை விளங்கிக் கொள்ள வேண்டும். தூய பவுல் ஒரு யூதப் பரிசேயன். இறுதிக் காலங்களைப் பற்றி யூத மதம் கூறுவதை நன்கு அறிந்து ஏற்றிருந்தார். யூதர்களை பொறுத்த வரையில் எல்லாக் காலங்களையும் இரண்டாக வகைப் படுத்தலாம். ஒன்று நிகழும் காலம் அதாவது இக்காலம், மற்றது எதிர்வரும் காலம். அதாவது வரப்போகும் காலம். நிகழ்காலம் மிக்க கொடியது, தீயது, திருத்த முடியாத அளவுக்கு கெட்டது. இந்தக் காலத்தில் பூமிப் பந்து சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. சோதனை வேதனைகள், துன்ப துயரங்கள், இன்னல்கள் இடை யூறுகள் நிறைந்தது.

ஆனால் வரப்போகும் காலம் நல்லது. அக்காலத்தில் உலகம் கடவுளின் ஆட்சியின் கீழ் இருக்கும். இது ஆண்டவரின் காலம். அமைதியும், சாந்தியும் நிலைக்கின்ற காலம்.

எபேசியருக்கு எழுதிய திருமுகத் தில் இறுதிக்கால இயல் மிகவும் குறிப்பிடத்தக்க முறையில் அமைந்துள்ளது. கிறிஸ்துவின் அரசு இன்று இங்கேயே இருப்பதாலும், அது இன்றும் செயலாக்கம் பெற வேண்டிய நிலையிலேயே உள்ளது. இன்று நாம் உள்ள நிலை ஆவியில் கிறிஸ்து வழியாக இறைவனின் அன்புக்கு நாம் காட்டும் பதிலன்பு ஆகும்.

தெசலோனிக்கருக்கு எழுதிய முதலாம் திருமுகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற முக்கிய இறையியல் கருத்தாக 'இறுதிக்காலம்' விளங்கின்றது. இதற்கு 'ஆண்டவரின் நாள்' என்ற கருத்து அடிப்படையாக அமைகிறது. குறிப்பிட்ட இரண்டு காலங்களுக்கும் இடையில்தான் ஆண்டவரின் நாள் வருகின்றது. அது இக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் அதாவது இறுதிக் காலத்தில், வரப்போகும் காலத்தின் விடிவின் போது இடம்பெறும். அது பொல்லாத நாள், பயங்கரமான நாள். அந்த நாளில் தான் இக்காலம் முற்றுப் பெற்று வரப்போகும் காலம் உதயமாகும். அந்த நாளில் இறைவன் அலகையுடன் இறுதிப்போர் செய்து,

அவனைத் தோற்கடித்து உலகை விடுவிக்கும் நாள். அந்த நாளில் பூமியதிர்ச்சிகளும், பூகம்பங்களும் ஏற்பட்டு பிரபஞ்சமே அசைக்கப்படும். அந்த நாளில் தான் இறந்தவர்கள் உயிர்த்தெழுவர். இறந்தவர்களை உயிர்த்தெழச் செய்வது வரப்போகும் புதிய யுகத்தின் முதற்கட்டப் பணியாகும். தூய பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய 1ம் திருமுகத்தில் கீழ்வரும் வார்த்தைகள் இவற்றை உறுதிப்படுத்துகின்றன. "நீங்கள் வானினின்று வரும் அவருடைய மகன் இயேசுவுக்காக காத்திருக்கிறீர்கள்" (1:10a) என்று அவருடைய வருகையையும் "திருடன் இரவில் வருவது போல ஆண்டவருடைய நாள் வரும் என்பதை நீங்களே திண்ணமாய் தெரிந்திருக்கிறீர்கள்" (5:3) என்று எண்ணிக் கொண்டிருக்கிற வர்களுக்கு இயேசுவே "வரப்போகும் சினத்திலிருந்து நம்மை மீட்பவர்" (1:10b) என்ற செய்தியும் தருகிறது. ஆனால் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களுக்கு "சினத்தின் நாள்" ஒளியின் மற்றும் மீட்பின் நாளாக உதயமாகிறது. "நீங்கள் அனைவரும் ஒளியின் மக்கள், பகலின் மக்கள்" (5:5) என்றும் குறிப்பிடப்படுகிறது.

**"திருடன் இரவில் வருவது போல ஆண்டவருடைய நாள் வரும் என்பதை நீங்களே திண்ணமாய் தெரிந்திருக்கிறீர்கள்"**

இறுதிக்காலத்தைப் பற்றிய இத்தகைய விசுவாசத்தோடு வாழ்ந்தவரே தூய பவுல். தமஸ்கு பாதையில் உயிர்த்த இயேசுவை அவர் சந்தித்த பொழுது வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. கிறிஸ்துவின் உயிர்ப்பால் வரப்போகும் காலம் வந்து விட்டது. எனவே இந்நிகழ் காலம் முற்றுப் பெற்று விட்டது. இறைவனுக்கும் அலகைக்கும் இடையிலான போர் நடைபெற்றாகிவிட்டது. அந்தப் போர் நிச்சயமாக கல்வாரியில் இடம் பெற்றிருக்க வேண்டும். ஆகவே இயேசுவே வாக்களிக்கப்பட்ட மெசியா. இக் காலம் முடிந்து விட்டது. வரப்போகும் காலம் உதயமாகி விட்டாலும் இன்னும் முழுமையாக வரவில்லை. அது வந்து கொண்டிருக்கிறது. நாம் இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில்தான் இருக்கிறோம். இந்த மெசியாவின் காலத்தில் மெசியா தீமையின் பிடியிலிருந்து கைப்பற்றிய அரசை, அன்பினால் அணிசெய்து வரப் போகும் புதிய காலத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார். இதுவே "ஆண்டவரின் நாள்" இறைவனின் அரசின் கீழ் வரப்போகும் புதிய காலம் தீர்கமாகவும், முழுமையாகவும் இடம்பெறும்.

ஆண்டவர் இயேசு மீண்டும் திரும்பி வந்து முழு அரசையும் தன் கீழ் கொண்டு வந்து அதை இறைவனிடம் ஒப்படைக்கும் நாள் "பருசியா" என்றழைக்கப்படும். புதிய ஏற்பாட்டில் அந்நாள் "கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாள்" என அழைக்கப்படுகிறது. "கட்டளை பிறக்க, தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க, கடவுளுடைய எக்காளம் முழங்க, ஆண்டவர் வானினின்று இறங்கி வருவார்"

(1தெச 4:16) "இவ்வாறு நம் ஆண்டவர் இயேசு தம்முடைய தூயோர் அனை வருடனும் வரும் பொழுது நம் தந்தையாம் கடவுள் முன் நீங்கள் குற்றமின்றித் தூய்மையாக..." (1தெச 3:13). அந்த நாள் ஆண்டவர் முழு மனுக்குலத் துக்கும் தீர்ப்பு வழங்க வரும்நாள். அந்நாள் திடீரென, திருடனைப் போல், எவரும் எதிர் பாராத வேளையில் வரும். எனவே மக்கள் இந்த நாள் எப்பொழுது வருமென அறிய ஆவலாயிருந் தனர். அந்த நாள் தாம் ஆயத்தம் இல்லாமல், பாவ நிலையில் இருக்கும் வேளை வந்து விடுமோ எனப் பயந்து ஏங்கினர். இத்தகைய பயத் திலும் ஏக்கத்திலும், எதிர்பார்ப்பிலும் இருந்த வர்களுக்கே தூய பவுல் இரண்டாம் வருகையைப் பற்றி பேசுகிறார்.

**இருளில் வாழ்பவன் தீய செயல்களை செய்பவனே. ஆனால் ஒளியில் வாழ்பவனுக்கு அந்தநாள் எப்போது வந்தாலும் ஒன்றுமில்லை.**

தூய பவுல் இங்கு இரண்டு விடயங்களைச் சொல்ல விளைகிறார். ஆண்ட வரின் நாள் திடீரென, இரவில் திருடன் வருவது போல் யாரும் காத்திராத, எதிர்பாராத வேளையில் வருமென்றும், மனிதன் எதிர்பாராமல் அந்த நாளில் சிக்கிக் கொள்வதற்கு காரணமே இல்லையென்றும் சொல்கிறார். இருளில் வாழ்ப வன் தீய செயல்களை செய்பவனே. ஆனால் ஒளியில் வாழ்பவனுக்கு அந்த நாள் எப்போது வந்தாலும் ஒன்று மில்லை. தீய சக்திகள் மத்தியில் கிறிஸ்தவன் விழிப்போடும், அறிவுத் தெளிவோடும் இருப்பதனால் ஆண்டவரின் நாளுக்கு அஞ்சத் வேண்டியதில்லை என்கிறார்.

இறுதியாக ஆண்டவர் வரும் நாள் எப்போது வருமென்று எவருக்குமே தெரியாத நிலையில், நாம் வேண்டிய சில அவசர காரியங்களை செய்வதற்கு கடைசி மட்டும் காத்திருக்கக் கூடாது. எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் நேரகாலத்தோடு செய்ய வேண்டிய சில காரியங்களை செய்ய அதாவது ஒளியைச் சார்ந்த நாம் அனைவரும் ஒளிக்குரிய செயல்களை செய்து, இருளை விரட்டியடித்து, திருமுழுக்கின் மூலம் நாம் பெற்றுக்கொண்ட நிலையான ஆற்றல்களாகிய விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய பண்புகளால் நம்மை அணிசெய்து கொள்வோமாக.

Bibliography


✓ Willian Barclay, The Mind of Paul, Fontana books, London, 1963.

✓ விவிலியக் களஞ்சியம்

✓ திருவிவிலியம், பொது மொழி பெயர்ப்பு

✓ பிலிப்ஸ் இ. யேசுதாசன் அ.ம.தி., கிறிஸ்தவ வாழ்வு

# பவுலின் மடல்களில் பெண்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம்



## (பவுலின் நற்செய்திப் பணியில் பெண்கள்)

அருட்சகோதரி-அஞ்சலினா A.C

தூய பவுலின் பணிகளை எடுத்துக் கூறும் அவரது மடல்கள் அவரது பணி களில் பெண்களின் முக்கியத் துவத்தையும் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. பெண்கள் அவரது பணிகளில் ஒத்துழைத்தமையையும் அவர்களது முன்மா திரியான கிறிஸ்தவ வாழ்வை யும் பவுல் பல்வேறு கட்டங்களில் எடுத்துரைக்கக் காண்கிறோம்.

பவுலின் பயணப் பாதையில் கொரிந்து நகரில் பவுல் சந்தித்த பெண்மணி பிரிஸ்கில்லா. பிரிஸ்கில்லா பவுலின் பணிகளில் இணைந்து செயற்பட்டவராக பவுலினால் குறிப்பிட்டு கூறப்படுகிறார். பிரிஸ்கில்லா அக்கிலாவின் மனைவி, இவர்கள் சின்ன ஆசியாவின் போந்து நகரைச் சார்ந்தவர்கள். யூத இனத்தைச் சேர்ந்தவர்கள். உரோமைப் பேரரசர் கிலவுதியு யூதர்களை உரோமை நகரைவிட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டதன் பொருட்டு கொரிந்து நகருக்கு வந்திருந்தனர் (தி.ப18:2). கொரிந்து பவுலைச் சந்தித்தபோது அவருடன் இவர்களுக்கு தொடர்பு ஏற்பட்டது. பவுல் தனது வாழ்க்கைச் செலவை தனது உழைப்பினாலேயே பெற்றுக் கொண்டார் என அறிகிறோம். அவர் செய்த கூடாரம் அமைக்கும் தொழிலையே பிரிஸ்கில்லாவும் அக்கில்லாவும் செய்து வந்தனர். இதன் காரணமாக தொழில் ரீதியாகவும் இவர்களுக்கு பவுலுடன் தொடர்பு ஏற்பட்டது. பவுல் கொரிந்து நகரில் பணியாற்றிய காலங்களில் இவர்களுடனேயே தங்கியிருந்தார் என அவர் குறிப்பிடுகிறார் (தி.ப 18:3). பவுலின் அத்தியவசிய தேவைகளான இல்லிடம், உணவு மற்றும் தேவைகளில் உதவுவதில் பெரும் பங்காற்றியிருக்கிறார். பவுலின் மடல்களில் பிரிசில்லா அக்கிலாவுடன் இணைந்து தம்பதிகளாகவே குறிப்பிடப்படுகின்றனர்.

பிரிஸ்கில்லா அக்கில்லா இருவரும் தம்மிடம் உள்ளதை தாராள மனத்துடன் பகிர்ந்து கொண்டது மட்டுமன்றி, பவுலின் போதனையை ஆழமாக வாழ்வில் எடுத்து தமது வாழ்வை ஆன்மீகம் நிறைந்ததாக மாற்றினர். அதன் விளைவாக தம்மை நற்செய்திப் பணிக்கு அர்ப்பணித்தனர். இவர்கள் பவுலுடன் தொழிலில் மட்டுமன்றி நற்செய்திப் பணியிலும் உடன் உழைப்பாளிகளாக இருந்துள்ளனர்.

கிறிஸ்தவ வாழ்வில் இறை பணியும் வேலையும் ஒன்றுடன் ஒன்று இணைந்து உரிய பங்களிப்பை பெற வேண்டும். வேலைக்கு முதன்மை கொடுத்து இறை பணியை புறக்கணிப்பதும், இறை பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து வேலையை செய்யாது விடுவதும் கிறிஸ்தவ வாழ்வில் ஏற்படும் போராட்டம். பிரிசில்லா இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று உறுதுணையாய் செயற்படக் கூடியவாறு தனது வாழ்வில் வாழ்ந்து காட்டினார். பின்வரும் பவுலின் வார்த்தைகள் இதற்கு சான்றாகின்றன. “கிறிஸ்து இயேசுவுக்காக என்னோடு சேர்ந்து உழைக்கின்ற பிரிசில்லா அக்கிலாவுக்கும் என் வாழ்த்து. அவர்கள் எனது உயிரைக் காக்கத் தலை கொடுக்கவும் முன் வந்தார்கள்.” (உரோ16:3) இந்த வகையில் முதலாம் நூற்றாண்டின் பெண் நற்செய்தியாளருள் எடுத்துக் காட்டான ஒருவராக பிரிசில்லாவை நாம் இனங்காண முடியும்.

> **“ கிறிஸ்து இயேசுவுக்காக என்னோடு சேர்ந்து உழைக்கின்ற பிரிகில்லா அக்கிலாவுக்கும் என் வாழ்த்து. அவர்கள் எனது உயிரைக் காக்கத் தலை கொடுக்கவும் முன் வந்தார்கள். ”**

இவர்கள் தமது பணிவாழ்வில் அப்பலோ என்பவரை கிறிஸ்துவின் சீடராக மனந்திருப்பி மீட்பின் முழுமைச் செய்தியை பறைசாற்றும் ஒருவராக மாற்றினர். அப்பலோ அலெக்ஸ்சாந்திரியாவைச் சார்ந்த யூதர், சொல்வன்மை மிக்க மறைநூல் அறிஞர். திருமுழுக்கு யோவனுடைய திருமுழுக்கு பற்றிய செய்திகளையே இவர் அறிந்திருந்து அவற்றை போதித்து வந்தார். இவரது போதனையை கேட்ட பிரிஸ்கில்லா அக்கில்லா இவருக்கு கடவுளின் அருள் நெறியையும், கிறிஸ்துவின் மீட்புச் செய்தியையும் விளக்கினார்கள். அதன் விளைவாக அப்பலோ பவுலுடன் இணையாக செயற்படக்கூடிய ஒரு நற்செய்திப் பணியாளராக உருவாகினார். “நான் நட்டேன், அப்பலோ நீர் ஊற்றினார், இறைவன் விளையச் செய்தார்.”

> **“ நான் நட்டேன், அப்பலோ நீர் ஊற்றினார், இறைவன் விளையச் செய்தார். ”**

என்று பவுல் சான்று பகரக்கூடிய வகையில் ஒரு சிறந்த பணியாளரை உருவாக்கியதில் பங்கெடுத்த பெருமை பிரிஸ்கில்லாவைச் சாரும்.

இவை மட்டுமன்றி தமது வீட்டை நற்செய்தியின் பணித்தளமாகவும், இறைவனை வழிபடும் இடமாகவும் பயன்படுத்த மனமுவந்து கையளித்தனர். கொரிந்தில் மட்டுமன்றி அவர்கள் உரோமைக்கு திரும்பிய பின்னரும் தமது இல்லத்தை திருச்சபையின் வளர்ச்சிப் பணிக்கு பயன்படுத்த தாராள மனதுடன் கொடுத்தனர். ஒரு இல்லத் தலைவியாக விளங்கிய பிரிஸ்கில்லா ஓர் இல்லத்தை வழிபாட்டு இடமாக மாற்றும் பணியில் நிச்சயமாக பெரும் பங்கு வகித்திருப்பார். ஓட்டுமொத்தமாக பார்க்கும் போது பிரிஸ்கில்லா; திருமுழுக்கினால் கிறிஸ்தவன், வாழ அழைக்கப்படும் முப்பணிகளையும் சிறப்புற நிறைவேற்றும் முதலாம் நூற்றாண்டின் எடுத்துக்காட்டான கிறிஸ்தவப் பெண் என்பது தெளிவாகும்.

பவுல் தனது இரண்டாவது தூதுரைப் பயணத்தின் போது மசிதோனியாவில் உள்ள பிலிப்பியில் சில நாட்கள் தங்கியிருந்தார். ஒய்வு நாளன்று ஆற்றங் கரையில் கூடியிருந்த பெண்களுடன் கிறிஸ்துவைப் பற்றிப் பேசினார். அப்பெண் களுள் ஒருவரான லிதியா பவுலின் பணிகளில் அவருடன் உழைப்பவராக மாறினார் (தி.ப 16:14-15).

லிதியா தியத்திரா நகரைச் சேர்ந்தவர். இந்நகர் செந்நிற ஆடைகள் உற்பத் தியில் பெயர் போன இடமாகும். செந்நிற ஆடைகளின் சில்லறை வியாபாரிகளில் ஒருவரான இவர் மணமாகாத பெண்மணியாகவோ அன்றேல் பணம் படைத்த விதவையாகவோ இருக்கலாம் என கருதப்படுகின்றது. லிதியா எனும் பெயர் இவருக்கு அவர் வாழ்ந்த பிரதே சத்தை மருவி வந்த பெயர் என்றும், இவர் பெயர் பவுலின் பிலிப்பியருக்கான மடலில் குறிப்பிடப்படும் சிந்திக்காவாகவோ அல்லது எயோதியாவாகவோ இருக்கலாம் என்பது சில ஆய்வாளர் கருத்தாகும்.

லிதியா பவுலின் போதனைகளை ஆழமாக உள்ளத்தில் இருத்தினார். ஊற்றுத் தண்ணீரான ஆவியானவர் நற்செய்திக்கான தாகத்தை அவர் உள்ளத் தில் ஊற்றெடுக்கச் செய்தார். நற்செய்தியின் மீதான ஆர்வம் அவரை வெகுவாக உந்தியதன் விளைவாக அவர் பவுலை தனது வீட்டுக்கு வந்து தங்குமாறு மிகவும் அன்புடன் அழைத்தார். மறுப்புத் தெரிவிக்க முடியாத தன்மையை கொண்டிருந்த அவ்அழைப்பிற்கு பவுல் செவிமடுத்தார். லிதியா வீட்டில் தங்கி அதை தனது பணித்தளமாக மாற்றி பணியைத் தொடர்ந்தார். லிதியாவின் இல்லம் பவுலுக்கும் பவுலின் பயணத் தோழருக்கும் அன்புடன்

> **“ என்அன்பார்ந்த சகோதர சகோதரிகளே நீங்களே என் மகிழ்ச்சி நீங்களே, என் வெற்றி வாகை ”**

வரவேற்ப்பு கொடுக்கும் ஓர் தங்குமிடமாகவும் பணித்தளமாகவும் மாறியது.

லிதியாவின் வாழ்வில் பணம் அவரது ஆன்மீக மீட்பு வாழ்வுக்கு தடையாகவோ பின்னடைவை ஏற்படுத் துவதாகவோ அமையாது, அவர் தனது செல்வத்தை தூதுப்பணிக்கு தாராள மனத்துடன் பகிர்ந்தளித்ததன் மூலம் அவரை இறைவனுக்கு ஏற்புடையவராக மாற வழிவகுத்தது. பவுலின் பணிகளில் நல்லுள்ளத்துடன் நன்கொடைகளை ஒன்றுக்கு மேற்ப்பட்ட தடவைகள் அனுப்பிவைத்து உதவியவர்கள் பிலிப்பியர்கள். இவ்வாறு பவுலுக்கு உதவியவர்களுள் ஒருவராக லிதியா காணப் படுகின்றார். "என்அன்பார்ந்த சகோதர சகோதரிகளே நீங்களே என் மகிழ்ச்சி; நீங்களே, என் வெற்றி வாகை" (பிலி 4:1) "எயோதியாவை கேட்டு கொள்கிறேன், சிந்திக்காவை கெஞ்சிக் கேட்கிறேன் என் உண்மையான தோழரே, அவர்களுக்கு உதவி செய்யுமாறு உம்மிடம் வேண்டுகின்றேன்" (பிலி 4:2). மேற்கூறப்பட்ட பவுலின் வார்த்தைகள் பிலிப்பிய திருச்சபையில் பெண்கள் பவுலுடன் நற்செய்திப் பணியில் தோள் கொடுத்து உழைத்தமையைப் புலப்படுத்துகின்றது.

பவுலின் போதனையால் கிறிஸ்துவை ஏற்று மீட்புச் செய்தியின் பணியாளராக மாறிய முதலாவது ஐரோப்பிய பெண்மணியாக லிதியா சிறப்பு பெயர் பெறுகின் றார். பவுல் தனது நற்செய்தி பணி வாழ்வில் எதிர் கொண்ட மற்றும் ஒரு முக்கியமான பெண் பெயிபா. பவுல் தனது மடலில் அவரை 'எனது சகோதரி' எனக் குறிப்பிடுகிறார். இது பெயிபா பவுலால் நிறுவப்பட்ட திருச்சபைகளில் ஒரு அங்கத்தவர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. பெயிபா கெங்கிரேயாவில் பவுல் ஏற்படுத்திய திருச்சபையின் திருத்தொண்டராக விளங்கினார் (உரோ 16:1)

திருத்தொண்டர் என்பது உணவுப் பரிமாற்றத்தில் ஈடுபடுபவரையோ, திருத் தூதராக பணி புரிபவரையோ, அல்லது நற்செய்தி பணியாளரையோ அன்றேல் அங்கீகரிக்கப்பட்ட திருப்பணியாள ரையோ குறித்து நிற்கிறது. மேலும் பவுல் தாம் திருச்சபையை நிறுவிய இடங்களில் சபைக் கண்காணிப்பாளர், திருத் தொண்டர் ஆகியோரை நியமித்தமை அவரது மடல்களில் குறிப்பிடப்படுகிறது. அவ்வாறாக நியமிக்கப்பட்ட ஒரு பெண்த்திருத்தொண்டராக பெயிபா விளங் கினார். இவர் பவுலின் நற்செய்திப் பணிகளில் உடன் உழைத்தவராகவும் பவுலுக்கு பல வழிகளில் உதவியவராகவும் பவுலால் குறிப்பிடப்படுகின்றார். அது மட்டுமன்றி தாராள மனமுள்ள பலருக்கும் உதவி செய்யும் ஒரு திருத்தொண்ட ராக விளங்கியிருக்கிறார் என்பதற்கும், பவுலால் நற்சான்று வழங்கப்பட்ட ஒரு திருத்தொண்டராக இருந்திருக்கிறார் என்பதற்கும் அவரது மடலில் சான்றுகள் காணப்படுகின்றன. "நம் சகோதரியாகிய பெயிபாவைக் குறித்து நற்சான்று அளிக்க விரும்புகிறேன்; இவர் கெங்கிரேயாவில் இருக்கும் சபையில் திருத் தொண்டராய் இருக்கிறார். இறை மக்களுக்கு ஏற்றவாறு ஆண்டவரின் பெயரால்

அவரை வரவேற்று, அவருக்குத் தேவையான உதவி செய்யுங்கள். ஏனெனில் அவரும் பலருக்கு உதவி செய்திருக்கிறார்; எனக்கும் உதவி செய்திருக்கிறார்" (உரோ 16:1-2). திருச்சபையில் காணப்பட்ட ஒரேயொரு பெண் திருத் தொண்டராக பெயிபாவை நாம் குறிப்பிட்டு கூறமுடியும்.

நிம்பா எனப்படும் பெண்மணி கொலோ சேயில் பவுலால் நிறுவப்பட்ட திருச் சபையில் ஆர்வத்துடன் உழைத்த ஒரு சகோதரி. பவுல் தனது மடலில் லவோதிக் கேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு தனது வதழ்த்துக்களை தெரிவிக்கையில் "நிம்பாவுக்கும் அவரது வீட்டி லுள்ள திருச்சபைக்கும்" என குறிப்பிடுகிறார். இதன் மூலம் நிம்பா தனது வீட்டை ஒரு பணித்தளமாக பயன் படுத்த உதவி யமை புலனாகின்றது. நிம்பா பவுலினால் கொலேசேயில் ஆரம்பிக்கப்பட்ட பணி தொடரவும் வளரவும் உதவியவராக நாம் கருத முடியும்.

பவுலின் பணிவாழ்வில் நேரடியாக உதவிக் கரம் நீட்டியும், உடன் உழைப் பாளிகளாயும் இருந்த பெண்கள் தவிர்ந்த இன்னும் சில பெண்கள் முக்கிய இடம் பெறுவதையும் நாம் காணலாம். திமோத்தேயுவின் தாயார் யூனிக்கி, அவரது பாட்டியார் லோயி ஆகிய இருவரும் அவ்வாறு குறிப்பிடப் பட கூடியவர் கள் (1திமொ 1:6). திமோத்தேயுவின் கடவுளின் மீதான நம்பிக்கையை பாராட்டி அவரை உற்சா கப்படுத்தும் பவுல், அந்த நம்பிக்கையை அவருக்கு கொடுத்த வர்கள் யூனிக்கியும் லோயுமே என்று அவ் இரு பெண்களையும் அவர்களது நம்பிக் கையையும் பாராட்டுகிறார். இவ்விருவரும் பவுலிற்கு ஒரு இறை நம்பிக்கையுள்ள பயணத்தோளனை, ஆரம்ப திருச்சபையின் மேய்ப்பன் ஒருவரை உருவாக்குவதில் பங்கெடுத்த பெருமையை பெறுகின்றனர். நல்ல மேய்ப்பர் களையும் திருப்பணியாளரையும் உரவாக்கும் பணியில் பெண்களினதும் அன்னையரினதும் பங்கு இன்றியமையாதது என்பதை எம் பெண் சமுதாயத் தினருக்கு இவ் இரு பெண்மணிகளும் எடுத்துக்காட்டுகின்றனர்.

புறவினத்தாரின் திருத்தூதராக விளங்கிய தூய பவுலின் பணி வாழ்வில் பெண்களும் சிறந்த பங்காற்றியுள்ளனர் எனக் கூறினால் அது மிகையாகாது.

Bibliography


✓ You Are Free (Women in New Testament) By R.J.Raja S.J, NBCLC Bangaloore, 1993.
✓ விவிலியக் களஞ்சியம் 'தியாகு', 1991
✓ திருவிவிலியம், பொது மொழிபெயர்ப்பு

### கிறிஸ்தவ ஒழுக்கவியலின் ஊற்றும்

### இரத்தினச் சுருக்கமும்:

# இறையன்பும் பிறரன்புமாகும்

அருட்தந்தை மைக்கல்சவுந்தரநாயகம்

கத்தோலிக்க ஒழுக்கவியலின் அடிப் படைக் கருத்துக்களாக சுதந்திரம், உண்மைத் தன்மை, இயற்கைச் சட்டம், சட்டம், மனச்சான்று ஆகியவற்றை குறிப்பிடலாம். இறைவன் எங்களை படைத்து எமக்கு சுதந்திரத்தை தந் துள்ளார். தெரிவு செய்கின்ற சுதந்திரம் எமக்குண்டு. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை யில் புத்தி, சித்தம் இவற்றின் அடிப் படையில் ஒரு காரியத்தை ஒரு குறிப் பிட்ட சூழ்நிலையில் செய்வதா இல்லையா என்ற முடிவை நாம் தெரிந்தெடுக் கலாம். எங்கள் தெரிவுகளுக்கு நாம் பொறுப்பேற்க வேண்டும். இப்படி குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தெரிவை மேற்கொள்வது மாத்திரமல்ல இவற்றின் ஊடாக எங்கள் இறுதி முடிவை தேர் தெடுக்கும் பொறுப்பு எம்மையே சார்ந் தது. இறைவனோடு நித்தியத்திற்கும் வாழ்கின்ற வாழ்விற்கு இட்டுச் செல் கின்ற முடிவாகவோ அல்லது நித்திய சாவிற்கு எம்மை இட்டுச்செல்கின்ற முடி வாகவோ அது அமையும்.

எதற்காக இயேசு நம் மத்தியிலே வந்தார் என்று அவரே சொல்லிக் கேட்போம். யோவான் நற்செய்தி 10ம் அதிகாரம் 10ம் வசனத்தில் நாங்கள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் குறைவாக அல்ல வாழ்வை நிறைவாக பெறும் பொருட்டே இறைவன் எம் ஒரே பேறான மகனாகிய நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவை நம் மத்தியில் அனுப்பினார். சட்டத்தையும் இறைவாக் கினர்களையும் நன்கு கற்று தேர்ந்த தூய பவுல் அவற்றின் கொடுமுடியாக முழு நிறைவாக இயேசுவைக் கண்டு அவரை அனுபவித்து அவரை அறிதலா கிய செல்வமே எந்த ஒரு மனிதனும் பெறக்கூடிய ஒப்பற்ற செல்வம் என்பதை பட்டறிந்துள்ளார். நம்மோடு பகிர்ந்து கொள்ள தன்னையே அர்ப்பணித்தார்.

இயேசுக்கிறிஸ்துவை ஆண்டவராக மீட்பராக ஏற்றுக் கொண்ட ஒருவர் வாழ வேண்டிய கிறிஸ்தவ ஒழுக்க வாழ் வைப் பற்றி தன்னுடைய மடல்களில்

பல இடங்களில் பேசுகின்றார். இந்த மட்டுப்படுத்தப்பட்ட கட்டுரையில் ஒரு சில பகுதிகளை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

1 தெச 4:3-5 : 7-8 கடவுள் நம்மை ஒழுக்ககேட்டிற்கு அல்ல தூய வாழ் வுக்கே அழைத்தார். எனவே இக் கட்ட ளைகளைப் புறக்கணிப்போர் மனிதரை அல்ல தம்முடைய தூய ஆவியை உங்களுக்கு அளிக்கும் கடவுளையே புறக்கணிக்கின்றனர்.

நீங்கள் பரிசுத்தராவதே கடவுளின் திருவுளம். அதாவது கெட்ட நடத் தையை விட்டு விட வேண்டும். கடவுளை அறியாத புறவினத்தார் காம இச்சை களுக்கு இடங்கொடுப்பது போல் நீங் கள் செய்யாமல் உங்களுள் ஒவ்வொரு வரும் தன் உடலை அடக்கி ஆண்டு மரியாதையாய் நடத்தி பரிசுத்தமாய்க் காப்பற்ற அறிந்திருக்க வேண்டும்.

இங்கே தூய பவுல் தூய்மையை பேணுதலை ஒரு வல்லமையாக (Aptit ucle) அல்லது ஆற்றலாக குறிப்பிடு கிறார். பாரம்பரியமாக இந்த தூய் மையை ஒரு புண்ணியம் எனலாம். இந்த புண்ணியத்தை நாம் கைக்கொண்டு நடக்கும் பொழுது கெட்ட நடத்தைக்கு எம்மை விட்டுக் கொடுக்காமல் இருப் போம். இது எவ்வாறு நடைமுறைப்படுத் தப்படுகிறது என்றால் இந்த புண்ணியத் திலே உறுதியாக நிலைத்திருப்பவர் தன் உடலின் இச்சையை கட்டுப்படுத்த தெரிந்தவராக அதற்குரிய புனிதத்திலும் மதிப்பு மரியாதையிலும் அதைப் பேண அறிந்தவராகவும் இருப்பதனால் தான் அவ்வாறு தூய்மையில் நிலைத்திருக்க முடிகிறது. இவ்வாறு அவர் தம் உடலை காம இச்சைகளுக்கு விட்டு கொடுப் பதில்லை. இவ்வாறு ஒருவர் தம் உடலை தூய்மையாக நடத்துவது என்றால் அதற்கு அவர் தன்னுடைய ஒத்த சுயாதீனத்தை பயன்படுத்தி தூய் மையான நடத்தையை முழு அறிவுடன் மனம் பொருந்தி தெரிந்தெடுப்பது அவசி யம். இச்சை சாதாரணமாக இச்சிக்கப் படுகின்றதை நோக்கி இயல்பாக முன் னேற தெண்டிக்கின்றது. காம இச்சை இயல்பாக பாலியல் சார்ந்த இச்சை நிறைவேற்றலை நோக்கியே முன்னேற முனைகின்றது. எனவே தான் இது விடயத்தில் கட்டுப்படுத்தல் வரையறை களை போடுவதில் தொடர் பயிற்சி செய்தல் அத்தியவசியமானது.


நாம் தூய்மையாக கற்பொழுக்கத் தில் நம் உடலை பேணுவதற்கு முதற் காரணம் எமக்கு வருகின்ற காம உணர்வுகளை இனங்கண்டு ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனோடு சேர்ந்து வருதல் கட்டுப்படுதல். இந்த கட்டுப்படுத்தலில் முக்கியமானதொன்று என்னவெனில் ஒழுக்ககேட்டிற்கு ஒருவரை இட்டுச் செல்ல வும் காரணிகளும் சூழ்நிலைகளும் இவற்றை சரியான நேரத்தில் இனங்கண்டு அவற்றை விட்டு விலகுவது அவற்றை தவிர்த்து நடப்பது இன்றியமையாதது.

அடுத்தபடியாக தூய பவுல் உடலை மரியாதயாய் நடத்தி பரிசுத்தத்தில் காப் பாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். இங்கே தனியே நம்முடைய உடலை மாத்திரம் அல்ல பிறருடைய உடலையும் மரியாதையாய் மதிப்புடன் நடத்து வதிலும் பரிசுத்ததில் பேணுதலும் எம் ஒவ்வொருவருக்கும் உரிய பொறுப்பும் உள்ளடங்கி இருக்கிறது. இவ்வாறு எமது உடலையும் பிறருடைய உடலையும் மதிப்புடனும் மரியாதையுடனும் தூய்மையிலே பேணுவதற்கு காம இச்சைக் கட்டுப்பாடு, இன்றியமையாததாக இருப்பதால் அத்தகைய இச்சை நிறை வேற்று வதற்கும் இடம் கொடாமல் கட்டுப்பாடும் வரையறைகளும் போடுவது எத்துணை முக்கியமானது என்று புலனாகின்றது. இவ்வாறு தூய்மையான ஒழுக்க வாழ்வு ஆவிக்குரிய வாழ்க்கை முறையில் ஒருவர் வாழ்கின்றார் என்பதை தெளிவாக காட்டுவதாகவும் அமைகின்றது. எனவே கிறிஸ்துவுக்கு ஏற்ற ஒழுக்க வாழ்வு தனியே ஒரு கட்டுப்பாடான மனித வாழ்வு என்று சொல்லுவதை விட தூய ஆவியின் கனியாக வாழப்படுகின்ற ஒரு வாழ்வு என்று சொல்லுவது பொருத்த மானதாகும். ஒரு மனிதனுக்குரிய கட்டுப்பாடான வாழ்வை வாழக்கூடிய திறன் வலுவூட்ட பெற்று வெற்றிகரமாக பயன்படுத்துவதற்கு தூய ஆவியானவரின் துணையும் வல்லமையும் எவ்வளவு அவசியம் என்பதை தூய பவுல் கலாத்திய ருக்கு எழுதிய திருமுகத்திலே மிகவும் அழகாக எடுத்து காட்டுகிறார். முதலில் பரத்தமை, கெட்ட நடத்தை, காமவெறி என்று அடுக்கடுக்காக ஒழுக்ககேடான வாழ்கையின் வடிவங்களை தெளிவாக கூறி இவ்வாறு வாழ்பவர்கள் இறையாட் சியை அடைய முடியாது என்று உரைத்து தொடர்ந்து தூயஆவியின் கனிகளை வரிசைப் படுத்தி அதில் இறுதி அழுத்தமாக தன்னடக்கத்தை குறிப்பிட்டு அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். எனவே தூய பவுலின் பார்வையில் தூய ஆவியாருடைய துணையின்றி இறைவனுக்கேற்ற முழுமையான ஒழுக்க வாழ்வை எவரும் வெற்றிகரமாக தொடர்ந்தும் வாழ முடியாது.

இக்கட்டுரை பாப்பறை யோன் பவுல் 1981ம் ஆண்டு தை மாதம் 28ம் திகதி மனித உடலில் புனிதமும் மரியாதையும் என்ற தலைப்பில் ஆற்றிய உரையை பெரிதும் தழுவி அமைந்திருக்கிறது.

St. Paul's Teaching on the sanctity and Respect of the Human Body
L'osservatore Romano

2 february 1981 page 19




# பவுலும் பயணங்களும்

அருட்பணி அ.மில்பர்

விவிலிய கதாபாத்திரங்கள் பல பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இறைமகன் இயேசு, அவரின் தாய் கன்னி மரியா ஆகியோருடன், ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட்டு, கடவுளின் மாபெரும் மீட்புத்திட்டத்தில் தங்கள் வாழ்க்கையை அர்பணித்த கதாபாத்திரங்கள் பல பல, அவர்களில் திருச்சபையின் தொடக்ககால வரலாற்றில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் புனித பவுல் என்றால் அது மிகையாகாது. பவுல் அடிகளார் இந்த அளவிற்கு ஓர் மிகப்பெரிய தாக்கத்தை திருச்சபையின் வரலாற்றில் ஏற்படுத்தக் காரணம் நற்செய்தியின் தூதுவனாக உலகின் கடைசி எல்லைவரை அவர் மேற்கொண்ட பயணங்கள் என்றால் அது மிகப்பொருத்தமாக இருக்கும். மனித வாழ்க்கைப் பயணங்கள் பலவற்றை நாம் பார்க்கின்றோம். தொழில் பயணம், ஆராய்ச்சிப் பயணம், உல்லாசப்பயணம் என்று பயணங்கள் பல. ஆனால் பவுல் அடிகளார் மேற்கொண்ட பயணம் "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு" (1கொரி 9:16) என்று நற்செய்தியின் தூதுவனாக அவர் மேற்கொண்ட தூதுரைப் பயணங்கள். புறவினத்தாருக்காக நற்செய்தியை அறிவிக்கவே நான் அனுப்பப்பட்டேன் என்று தன் அழைத்தலை நன்கு உணர்ந்தவராக இப் பயணங்களை அவர் மேற்கொள்கின்றார். "நற்செய்தியை அறிவிப்பவனாகவும், திருத்தூதனாகவும், போதகனாகவும் நான் ஏற்படுத்தப்பட்டுள்ளேன்" (2திமொ 1:1) என்று கூறுவதையும் இங்கு காணலாம்.

> **"நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு"**

திருச்சபையின் ஆரம்பகால வரலாற்றைப் பார்க்கும் பொழுது அதன் வளர்ச்சியின் படிகளில், பலருடைய பணிகள் பற்றி பேசப்பட்டாலும் பவுல் அடிகளாரின் பயணங்கள் மட்டுமே புதிய ஏற்பாட்டில் தெளிவுற கூறப்படுகின்றது. நான் உங்களிடையே வரும் போது என் அதிகாரத்தைப் பயன்படுத்தி உங்களிடம் கண்டிப்பாய் நடந்து கொள்ளவில்லை". (2கொரி 13: 10) என்ற வார்த்தையிலும் "திருமுழுக்கு கொடுக்க அல்ல, நற்செய்தியை அறிவிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினார்" (1கொரி 1:17) என்பதிலிருந்தும், "பயணங்கள் பல

> **"திருமுழுக்கு கொடுக்க அல்ல, நற்செய்தியை அறிவிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினார்"**

செய்தேன்" (2கொரி 11:26) என்ற இன்னும் பல வார்த்தைகளிலும் அவர் பல தூதுரைப் பயணங்களை மேற்கொண்டார் என்பது தெளிவாகின்றது.

## அந்தியோக்கிய திருச்சபை அனுபவமும், பவுலின் பயணங்களும்

புனித பவுல் அடிகளாரின் தூதுரைப் பயணங்களுக்கு அடிப்படையாக அமைந்தது, அந்தியோக்கிய திருச்சபையில் அவர் பெற்ற அனுபவங்களும், அங்கு ஏற்பட்ட சூழ்நிலை மாற்றங்களும் தான் காரணிகளாக இருந்தது என்று கூறலாம்.

இந்த அந்தியோக்கிய திருச்சபையே தொடக்க காலத்தில் எருசலேமுக்கு அடுத்ததாக மிக பிரதான பணித்தளமாக இருந்து வந்தது. கிரேக்க மொழி பேசுபவர்களே இங்கு அதிகம் இருந்தாலும், சிறிய யூத சமூகமும் இங்கு இருந்து வந்தது. ஸ்தேவானின் மரணத்தை தொடர்ந்து பெருமளவிலான கிறிஸ்தவர்கள் வந்து குடியேறிய இடமாக இது இருந்துள்ளது (தி.ப. 11:19). இங்கு தான் கிறிஸ்தவ மறையை பின்பற்றியவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயரை பெற்றார்கள். இத்திருச்சபைக்கு பொறுப்பாயிருந்த பர்ணபா தர்சு நகருக்குச் சென்று பவுலை இங்கு அழைத்து வந்து, இருவருமாக இங்கு பணிபுரிந்தனர். இங்கு அவர் பெற்ற அனுபவங்கள், ஆற்றிய பணிகள் அவர் தொடங்கவிருந்த, தூதுரைப் பயணங்களுக்கு அத்திவாரமாக அமைந்தது.

## முதல் தூதுரைப் பயணம்

தன்னுடைய தோழர்களான பர்ணபா, அவருடைய மைத்துனர் யோவான் மாற்குவுடன் இணைந்து தூய ஆவியின் வழிகாட்டலுக்கிணங்க அந்தியோக்கியாவிலிருந்து பவுல் தன் முதல் தூதுரைப் பயணத்தை ஆரம்பிக்கின்றார். பவுலின் பயணம் கி.பி. 49 முதல் 52 வரை இடம் பெறுகின்றது. தி.ப. 13:14-14:28 பகுதிகள் இப்பயணத்தைப் பற்றி கூறுகின்றது. நோன்பிலிருந்து இறைவனிடம் வேண்டி அந்தியோக்கிய திருச்சபை அவர்களை வழியனுப்புகின்றது. முதலாவது பயணம் செலுக்கியாவை நோக்கியும், பின்பு அங்கிருந்து கப்பலேறி பர்ணபாவின் பிறப்பிடமான சைப்பிரசை நோக்கியதாகவும் இருக்கின்றது. இப்பயணத்தில் அவர் எண்ணற்ற துன்பங்களை நற்செய்தியின் பொருட்டு அனுபவிப்பதைப் பார்க்கின்றோம். கலாத்தியாவில் இருந்த போது தான் பட்ட இன்னல் இடுக்கண்களை நினைத்து கொரிந்தியருக்கு எழுதும் போது, "மரண தண்டனையே விதிக்கப்பட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது" (2கொரி 1:9) என்று விவரிப்பதானது நற்செய்திக்காக இப்பயணத்தில் அவர் மேற்கொண்ட

போராட்டத்தின் தீவிரத்தை வெளிப்படுத்துகின்றது. ஆண்டவர் மேல் வைத்த நம்பிக்கையும், அவரின் வல்லமையும் தடைகளை தகர்த்தெறிகின்றது. உதாரணமாக பர்யேசு என்ற மந்திரவாதி பவுலையும், பர்னபாவையும், செர்க்கியு பவுல் என்ற உரோமைய ஆளுநனை சந்திக்கவிருப்பதை தடை செய்ய முயற்சிப்பதையும் பின் ஆண்டவருடைய நாமத்தினால் அவரை குருடாக்கியதையும் குறிப்பிடலாம்.

நற்செய்திப்பணி என்பது கடவுளிடமிருந்து தான் பெற்ற அழைத்தல், எனவே அந்த அழைத்தலுக்கேற்ப தொடர்ந்தும் சைப்பிரசிலேயே நில்லாமல் ஆசியாவின் பெருகை நகருக்குப் போகின்றார், அங்கே மாற்கு யோவான் அவர்களை விட்டுப் பிரிவதையும் அதனால் பவுல் மிகவும் ஆத்திரமடைவதையும் பார்க்கின்றோம். மாற்கு ஏன் அவர்களை விட்டுப் பிரிய வேணடும் என்ற காரணத்தை நாம் வேதாகமத்தில் நாம் காணவிட்டாலும், புறவினத்தார் மற்றும் விருத்தசேதனம் பற்றிய விடயமே காரணமாக இருக்கலாமென சில விவிலிய வல்லுனர்கள் கூறுகின்றார்கள். அங்கிருந்து யூதர்கள் அதிகமாக வாழ்ந்த பிசிதிய நாட்டு அந்தியோக்கியாவிற்கு போவதையும், அங்கே செபக்கூடத்தில் அனைவரையும் பிரம்மிப்பில் ஆழ்த்தும் உரை நிகழ்த்துவதையும் காண்கின்றோம். யூதர்களின் வரலாற்றில் இயேசுகிறிஸ்துவே முன்னறிவிக்கப்பட்ட மெசியாவாகவும், இறைவாக்குகளை நிறைவேற்றும் முதன்மையான இறைவாக்கினராகவும் இருக்கின்றார் என்பதை மையப்படுத்தியதாக இவ்வுரை அமைந்திருந்தது. சில நாட்களில் அந்தியோக்கியாவில் பூகம்பம் ஒன்று உருவாகவே, அதற்கு காரணம் பவுலின் பிரசன்னமும், உரையும் தான் என தவறாக புரிந்து கொள்ளப்பட "நாங்கள் புறவினத்தாரிடம் செல்கிறோம்" (தி.ப. 13:46) தங்கள் கால்களில் உள்ள தூசிகளை அவர்களுக்கு எதிராக உதறிவிட்டு (தி.ப. 13:52) இக்கோனியாவுக்கு சென்றார்கள். இக்கோனியாவில் ஆண்டவரைப் பற்றி துணிவுடன் பேசி, பல அடையாளங்களையும், அருஞ்செயல்களையும் செய்து நற்செய்தியை அறிவித்தாலும் யூதரில் ஒரு பிரிவினர் இவர்களை இழிவுப்படுத்தி கல்லால் எறிய திட்ட மிட்டதால் அங்கிருந்து தப்பிச் சென்று லிஸ்திராவுக்கு செல்கிறார்கள். யூத சட்டங்களை விட்டுவிட்டு கிறிஸ்துவில் மட்டுமே நம்பிக்கை கொண்டு வாழ, இங்கு யூதர்களுக்கு அழைப்பு விடுகிறார்கள். இயேசுவின் பெயரால் செய்த புதுமைகளை பார்த்த மக்கள் [முடவனை குணமாக்கியது (தி.ப.14:10)] தெய்வங்களே மனித உருவில் வந்து விட்டது எனக்கூறி அவர்களுக்கு பலியிட எத்தனிப் பதையும், ஆனால் அவர்கள் அதை தடை செய்வதையும் பார்க்கின்றோம். இங்கும் சில யூதர்களின் சூழ்ச்சியால் பவுல் கல்லெறிபடுகின்றார். அவர் இறந்துவிட்டார் என்று எண்ணி நகருக்கு வெளியே இழுத்துப்போடப்பட்டாலும், சீடர்கள் அவரை காப்பாற்றுகின்றனர். அங்கிருந்து தெர்பைக்கும், பிறகு அந்தியோக்கியாவுக்கு திரும்புவதையும் பார்க்கின்றோம். பவுலையும், பர்னபாவையும் திருச்சபை பெருமகிழ்வுடன் வரவேற்கின்றது

(தி.ப.14:27). பவுலின் இம்முதல் தூதுரைப் பயணத்தில் அவர் சந்தித்த அவமானங்களும், துன்பங்களும் ஏராளம். (தி.ப.21:22), ஆனாலும் இவற்றுக்கு மத்தியிலும் யேசுவின் மேல் வைத்த அன்பால் உந்தப்பட்டு இனத்தவர் பலரை திருச்சபையில் இப்பயணத்தினூடாக சேர்க்கின்றார்.

## இரண்டாம் தூதுரைப் பயணம்

பவுலடிகளாரின் இரண்டாவது தூதுரைப் பயணம், திருச்சபையின் முதல் சங்கமாகிய எருசலேம் சங்கத்திற்குப் பின் ஆரம்பிக்கின்றது. திருத்தூதர்களின் முதல் தூதுரைப்பயணத்தின் விளைவாக பலர் திருச்சபையில் இணைவதையும் இதனால் யூதக்கிறிஸ்தவர்களுக்கும், யூதர் அல்லாத கிறிஸ்தவர்களுக்கும் பல கருத்து வேறுபாடுகள் உருப்பெறுகின்றன. மோயீசனின் முறைப்படி விருத்த சேதனம் செய்து கொள்ளாவிட்டால் யாரும் மீட்படைய முடியாது என்ற கொள்கையில் சில யூத கிறிஸ்தவர்கள் விடாப்பிடியாக இருந்தனர். கி.பி 49 இல் கூட்டப்பட்ட ஜெருசலேம் சங்கத்தில் அந்தியோக்கிய திருச்சபையின் சார்பாக பவுலும், பர்னபாவும் கலந்து கொள்ள எருசலேம் திருச்சபையின் சார்பாக ஏனைய திருத்தூதர்கள் கலந்து கொண்டனர். திருமுழுக்கு பெறுவதற்கு விருத்தசேதனம் செய்யத் தேவையில்லை என முடிவு செய்யப்பட்டு, சிலைகளுக்கு படைக்கப்பட்டவை, கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்தவை, இரத்தம் மற்றும் பரத்தமை ஆகியவற்றை தவிர்க்க வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது (தி.ப.15:20). சங்கத்தின் தீர்மானம் பவுலுக்கு திருப்தியையும், உற்சாகத்தையும் கொடுக்க புதிய உத்வேகத்துடன் இரண்டாவது தூதுரைப் பயணத்தை கி.பி.49ல் சீலாவுடன் அந்தியோக்கியாவில் இருந்து ஆரம்பிக்கின்றனர் (தி.ப.15:40). மாற்குவையும் தங்களுடன் அழைத்துச் செல்ல வேண்டுமென்ற பர்னபாவின் விருப்பத்தினால் இருவருக்குமிடையே சிறு முறுகல் நிலை தோன்றி, பர்னபா இல்லாமலேயே பவுலின் இரண்டாவது தூதுரைப்பயணம் தொடர்கின்றது. திருத்தூதர் பணி 15:36-18:23 பகுதிகளில் இப்பயணத்தைப் பற்றிய விளக்கம் கொடுக்கப்படுகின்றது.

“நாம் ஆண்டவரின் வார்த்தையை அறிவித்த அனைத்து நகரங்களுக்கும் திரும்பிப் போய் அங்குள்ள சகோதரர், சகோதரிகள் எவ்வாறு இருக்கிறார்கள் என்று கவனிப்போம்” (தி.ப.15:36) என்ற பவுலினுடைய வார்த்தைகள், இப்பயணத்தினுடைய நோக்கத்தை தெட்டத்தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றது. அவர்களுடைய முதல் பயணம் சிரியா, சிசிலியாவை நோக்கியதாக இருந்தது (தி.ப.15:41). அங்கு திருச்சபையை உறுதிப்படுத்திய அவர்கள், பின்பு, தெருபை, லிஸ்திரா நகர்களை வந்தடைகிறார்கள். லிஸ்திராவில் திமொத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்து, தம்முடன் அழைத்துச் செல்கின்றார் (தி.ப.16:3).

இச்செயல் முரண்பாடானதொன்றாகத் தோன்றினாலும் அவருடைய தூதுரைப் பணி யூதர்கள் மத்தியிலும், புற இனத்தவர் மத்தியிலும் சிறப்பாக நடைபெற இச்செயல் மிக அவசியமென்பதை பவுல் உணர்ந்திருந்தார். ஏனெனில் உலக வரலாற்றில் யூத இனம் தனித்தன்மை கொண்டது. கல்வியில் கிரேக்கமும், அரசியலிலும், படைபலத்திலும் உரோமையரும் சிறந்தோங்கியிருந்த அக்காலத்தில் கடவுள் நம்பிக்கையிலும், ஒரே கடவுள் கொள்கையிலும் தனித்தன்மை கொண்ட இனமாக யூதர்கள் இருந்தனர். யாராவது இக்கொள்கையிலிருந்து விலகிப்போனால் அச்செயலை வேசித்தனம் என்றும், விபச்சாரம் என்றும் கடும் சொற்களால் விமர்சித்தார்கள். உ+ம் "உண்மையாய் இந்நகரம் எப்படி விலைமகள் ஆயிற்று" (எசா 1:21) அதுமட்டுமல்ல இயேசுவின் காலத்தில் உரோமைப் பேரரசின் மொத்த மக்கள் தொகையில் 7% யூதர்கள் வாழ்ந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். முக்கியமாக எகிப்து சிரியா போன்ற நாடுகளின் பகுதிகளான அந்தியோக்கு, தமஸ்கு, அலெக்சாந்திரியா போன்ற நகரங்களில் இவர்கள் பரவியிருந்தனர். பாலஸ்தீனாவுக்கு அப்பால் "சிதறி வாழ்ந்த" (DIASPORA) யூதர்கள் என இவர்கள் அழைக்கப்பட்டனர். இவர்கள் தங்கள் சமய வழிப்பாட்டை நடத்த உரிமையையும், பேரரசர் வழிப்பாட்டிலிருந்தும், கட்டாய ராணுவ சேவையிலிருந்தும் விடுதலையையும் பெற்றிருந்தனர். எனவே இம்மக்களை நோக்கிய புனித பவுலின் இரண்டாவது பயணத்தில் திமோத்தியேவிற்கு விருத்தசேதனம் செய்யப்படுகிறதென்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இவர்கள் சிறிய ஆசியாவில் பணி செய்ய எண்ணிய போதும் அதன் பின் பெத்தானியாவிக்கு செல்ல முயற்சித்தபோதும் பரிசுத்த ஆவியால் தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். பின் துரோவாவுக்குச் சென்று பணியை ஆரம்பிக்கிறார்கள். துரோவாவில் இரவில் பவுல் ஒரு காட்சி காண்கிறார்(தி.ப16:9ff). அதில் மசிதோனியர் ஒருவர் தோன்றி தங்களுக்கு வந்து உதவி செய்யும்படி கேட்கிறார். இதனூடாக கடவுளின் திட்டம் ஐரோப்பாவில் நற்செய்தி அறிவிப்பது என அறிந்து, அதை நோக்கி பயணம் செய்கிறார்கள். முதன் முதலாக மாசிதோனியப் பகுதியின் முக்கிய பகுதியான பிலிப்பிக்கு செல்கின்றார்கள் (திப16:12). யூதர்கள் அதிகம் இல்லாத பகுதியான இங்கு செபக்கூடம் காணப்படவில்லை. எனவே ஆற்றங்கரை ஒன்றில் நற்செய்திப்பணி ஆரம்பிக்கப்படுகின்றது. லீதியா என்ற பெண்ணும் அவளுடைய இல்லத்தாரும் மனம்மாறி திருச்சபையில் இணைகிறார்கள். அவர்களுடைய வீட்டிலிருந்து கொண்டே பவுலும் தோழர்களும் நற்செய்திப் பணியில் ஈடுபடுகின்றனர் (தி.ப16:11ff).

ஆவியானவர் தீமையான சம்பவங்களினூடாகவும், நன்மைத்தனங்களை செய்யக்கூடியவர் என்பதை பிலிப்பி நகரில் நடந்த சம்பவங்கள் தெளிவுப்படுத்துகின்றன. உதாரணமாக பேய் பிடித்த பெண் ஒருவரை பவுல் குணமாக்குகின்றார்

(தி.ப16:18). இதனால் பேய் ஓட்டும் தொழிலில் கொழுத்தலாபம் பெற்றவர்கள் கடும் சினமுற்று, தலைவர்களை தூண்டிவிட்டு உரோமைச் சட்டத்தின் கீழ் அவர்களை சிறையிலடைக்கின்றனர். அன்றிரவு நில நடுக்கம் ஏற்பட்டு சிறைக் கதவுகள் திறக்கப்பட்டு அவர்கள் தப்பி செல்வதற்கான சந்தர்ப்பம் அமைந்தாலும், அவர்கள் அவ்வாறு செய்யாத நேர்மையைக் கண்ட சிறைக் காவலனும் அவனது குடும்பத்தாரும் நற்செய்தியை ஏற்றுக் கொள்வதைப் பார்க்கின்றோம் (தி.ப16:12-40). தெசலோனிக்காவில் பலர் பவுலின் போதனைகளை மறுப்பதும் சிலர் ஏற்றுக்கொள்வதுமாக இருந்தது. யூதர்களின் பொறாமையின் நிமித்தம் அவர் மீது தாக்குதல் நடத்த முயற்சிகள் யேற்கொள்ளப்படுகின்றது. கிரேக்க கலாச்சாரத்தின் கேந்திர ஸ்தலமான ஏதேன்ஸ் நகரில் ஆண்டவரின் உயிர்ப்பு பற்றிய நற்செய்தியை ஏற்றுக் கொள்ள பலர் முன்வரவில்லை. ஆனாலும் அவர் மனம் தளரவில்லை. அங்கிருந்து கொரிந்து சென்று ஆக்கில்லா, பிரிஸ்கிலா தம்பதியினரின் உதவியுடன் 18மாதங்கள் பணி செய்து ஓர் பலமான திருச் சபையை இங்கு நிறுவுகின்றார் (தி.ப18:1ff). இங்கிருந்துதான் தனது முதல் திருமுகங்களை தெசலோனிக்க இறைமக்களுக்கு எழுதுகின்றார். அங்கிருந்தே அக்கிலா, பிரிஸ்கில்லாவுடன் செசாரியாவினுடாக எருசலேம் போய் அங்கிருந்து அந்தியோக்கியா வந்தடைகின்றார். அதன் உடன் பவுலின் இரண்டாவது தூதுரைப் பயணம் முடிவுக்கு வருகின்றது. (தி.ப 18:18-22)

## மூன்றாவது தூதுரைப் பயணம்:

கி.பி 52-58 வரையான காலப்பகுதியில் பவுலின் உடன் ஊழியர்களான திமொத்தேயு, தீத்து, எரஸ்து போன்றவர்களுடன், தான் ஸ்தாபித்த திருச்சபையை தரிசிக்க தனது மூன்றாவது பயணத்தை தொடங்குகின்றார். தெருவை, லிஸ்திரா வழியாக பயணம் செய்து இறைமக்களை சந்தித்து சிறிய ஆசியாவின் தலை நகரான எபேசு நகரை அடைகின்றார்கள். மூன்றாண்டுகளாக அங்கிருந்து நற் செய்திப் பணியை செய்ததினால் வழமையான யூதரின் எதிர்ப்பை தூதர்கள் சந்திக்கின்றனர். எனினும் ஆண்டவர் உடன் இருக்க மனிதர் என்ன செய்து விட முடியும் என்ற நம்பிக்கையுடன் அனைத்தையும் எதிர்கொள்கின்றார். போதிப் பதற்கு கல்விக் கூடம் ஒன்றை வாடகைக்கு எடுக்கின்றார். எபேசுவை மையமாக வைத்து எனைய திருச்சபைகளை மேற்பார்வை செய்கின்றார். இங்கிருந்து தான் கொரிந்திய, கலாத்திய, பிலிப்பிய திருச்சபைகளுக்கு மடல்களை எழுது கின்றார். எவ்வளவோ எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நற்செய்திப் பணி நடை பெற்றாலும் தெமேத்திரியு என்ற பொற்கொல்லர்களின் தலைவனால் பவுலுக்கு எதிரான கலவரம் ஒன்று உருவாக்கப்படுகின்றது. ஆனாலும் நகரத்தலைவன் ஊடாக ஆவியானவர் செயலாற்றி எற்படவிருந்த இக் கலகத்தை நிறுத்துகின்றார்.

இவ்வாறு எபேசில் தன் பணியை வெற்றி கரமாக முடித்துக்கொண்ட பவுல் அங்கிருந்து துரோவாவுக்கும், மாசிதோனியாவுக்கும் செல்கின்றார். கொரிந்திலிருந்து நற்செய்தியை கொணர்ந்த தீத்துவையும் சந்திக்கின்றார். பின்பு கொரிந்துவில் மூன்று மாதங்கள் தங்கிய அவர் அங்கிருந்து உரோமைத் திருச்சபைக்கான மடலை வரைவதையும் இங்கு பார்க்கின்றோம்.

ஏழ்மையில் துவண்ட ஜெருசலேம் திருச்சபைக்காக சேர்த்து வைத்திருந்த பணத்துடனும் உடன் உழைப்பாளர்களுடனும் ஜெருசலேம் நோக்கிப் பயணத்தை தொடங்குகின்றார். பயணத்தின் நடுவிலும் நற்செய்தி அறிவிக்கும் பணியை தொடர்ந்து செய்கின்றார். மாடியில் இருந்து கீழே விழுந்து உயிர்விட்ட இளைஞனை உயிர்த்தெழச்செய்கின்றார். எபேசு நகர திருச்சபை மூப்பர்களிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு ஜெருசலேம் அடைந்த அவரை கிறிஸ்தவர்கள் அன்புடன் வரவேற்பதை (தி.ப 21:17)ல் பார்க்கின்றோம்.

## முடிவுரை

"உலகெல்லாம் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மத் 16:15) என்ற இயேசுவின் கட்டளையை முழு மூச்சுடன் செயலாற்றியவர் பவுல் என்றால் அது மிகையாகாது. பவுலின் தூதுரைப்பயணங்களும், அதன் போது அவர் எழுதிய ஒவ்வொரு வார்த்தையும் அவர் எப்படி தனது வாழ்க்கையினால் கிறிஸ்துவிற்கு சான்று பகிர்ந்தார் என்பதை தெளிவுறத் கூறும். "கிறிஸ்து இயேசு என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து ஓடுகின்றேன்" என்று தொடக்கத்தில் கூறிய அவர் (பிலி 13:12) என் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் என்று அவர் தன் வாழ்வின் இறுதியில் (2திமொ 4:7) கூற முடியும் என்றால், அவருடைய ஆன்மிக வளர்ச்சியும், வாழ்வும் எவ்வாறு தான் சந்தித்த மக்களுக்கு முதல் பாடமாக அமைந்திருக்கும் என்பது தெளிவாகின்றது,

> **"உலகெல்லாம் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்"**

நற்செய்திப் பணியாளர்களாக இன்று நாம் அழைக்கப்படுகின்றோம் என்றால் அதற்கு உரியவராக நாம் மாற வேண்டும். அப்போதுதான் நற்செய்திப் பணி சிறக்கும் என்பதையே புனித பவுல் அடிகளாரின் மூன்று முத்தான தூதுரைப் பயணங்களும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

# புனித பவுல் மறையறிவிப்பில் கையாண்ட நுட்பங்கள்

அருட்சகோதரன். ஜே. எல்மோ அருள்நேசன்

## அறிமுகம்

பவுலின் திருமுகங்களும் திருத்தூதர் பணி நூலும் பவுலடிகளாரின் ஆளுமைப்பண்பை தெளிவாகப்படம் பிடித்துக் காட்டுகின்றன. அவர் தனது பணி வாழ்வின் அழைப்பிலே கையாண்ட செயற்திறன் மிக்க நுட்பங்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மறை அறிவிப்புக்கான இறைவனின் அழைப்பினை தமஸ்கு அனுபவத்திலே உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்து நேரடியாகப் பெற்ற பவுலடிகளார் தனது மறை அறிவிப்பிலே இயேசு ஆண்டவரை தன்னிலே முழுமையாக பிரதிபலித்ததே அவர் கையாண்ட சிறப்பான மறையறிவிப்பு நுட்பம் எனலாம்.

கிறிஸ்வையையும் அவரைப்பற்றிய நற்செய்தியையும் அறிவிக்க கிடைத்த சகல வழிகளையும் செவ்வனே பவுலடிகளார் பயன்படுத்தினார். இதன் விளைவாகவே இயேசுவைப் பற்றிய செய்தி பட்டி தொட்டி எங்கும் வல்லமையோடு பரவ ஆரம்பித்தது. இத்தகைய மறையறிவிப்பின் ஆர்வத்துக்கு, அவர் கையாண்ட நுட்பங்களின் செயற்திறனுக்கு அடிப்படையாக அமைந்தது தமஸ்கு அனுபவத்திலே இருந்து அவரிலே எழுந்த உறுதிப்பாடுதான். இதனையே உரோமையருக்கு எழுதிய திருமடலிலே தெளிவாக அடிகளார் கூறுகின்றார். (உரோ 10:14-15)

கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி, அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள்? தாங்கள் கேள்வியுறாத ஒருவர் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்றுபற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள். அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள்? நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன.

**நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன.**

இந்த உறுதிப்பாடே வல்லமையுள்ள நற்செய்தியின் மறை அறிவிப்பிற்கு அடித்தளமாக அமைந்திருக்கக் கூடிய நன்கு திட்டமிடப்பட்ட நுட்பங்களை கையாள

அடிகளாரைத் தூண்டியது எனக் கூறலாம். அந்த வகையிலே திருத்தூதர் பணி நூலிலும் அவரின் திரு மடல்களிலும் அவரின் ஆளுமையை அவதானித்து பெற்றுக் கொண்ட, அவர் கையாண்ட நுட்பங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

## அனைத்திலும் கிறிஸ்துவையே மையமாகக் கண்டார்.

நற்செய்தியின் பரம்பலுக்கும் பகிர்விற்கும் இயேசுவையே எப்போதும் பவுல் அடித்தளமாக கொண்டிருந்தார். அனைத்திலும் இயேசு ஆண்டவரையே முதன்மைப்படுத்தினார். தனது வாழ்வினை எடுத்துக்கொண்டாலென்ன இன்னும் பிற விடயங்களை எடுத்துக்கொண்டாலென்ன அனைத்திலும் கிறிஸ்துவையே மையமாகக் கண்டார். அவரின் திருமுகங்களிலே காணப்படுகின்ற முக்கியமான நான்கு கிறிஸ்தவ பாடல்களை (Christological Hymns) பார்க்கும் இடத்து (காண் பிலி 2:6-11; கொலோ 1:15-20; எபே 1:3-14; 1திமோ 3:16) பவுலடிகளாரின் மறையறிப்பிலே இயேசு ஆண்டவர் பெற்ற அதி உன்னதமான இடமானது தெளிவாகப் புலப்படுகின்றது திருத்தூதர் பணி நூலிலே குறிப்பிடப்பட்டுள்ள பவுலின் மறையுரைகளை நோக்குகின்ற போது 'இயேசுவே அனைத்திலும் மையம்' என்கின்ற உண்மையினை பவுலடிகளார் இடித்துரைப்பது புலப்படு கின்றது. (திப 13:13-47; 17:22-31) இன்னும் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலே 'கிறிஸ்துவின் பெயரைக் கேள்விப்படாத இடங்களில் மட்டும் நற்செய்தியை அறிவிப்பதே என் நோக்கமாக இருக்கின்றது' (உரோ 15:20) என்று தன்னுடைய இலக்கையும் குறிப்பிடுகின்றார். இவ்வாறாக 'கிறிஸ்துவே அனைத்தின் மையம்' என அவர் கொண்டிருந்த உறுதிப்பாடு அவரின் மறையறி விப்பின் வெற்றிக்கு பெரும் உந்து சக்தியாக அமைந்தது.

## எல்லாருக்கும் எல்லாமாக...

கிறிஸ்துவுக்காகவும், நற்செய்திக்காகவும் எதையும் செய்யக்கூடிய தனது தயார்நிலையை பவுலடிகளார் தனது எழுத்துக்களிலே அடிக்கடி வெளிப் படுத்துவார். கொரிந்தியருக்கு அவர் எழுதுகின்ற போது 'யூதரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர யூதருக்கு யூதரைப்போல் ஆனேன்... ஏப்படியாவது ஒரு சிலரை யேனும் மீட்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமானேன்' (1கொரி 9:20-22) எனக் குறிப்பிடுகின்றார்.

இவரின் இத்தகைய ஆளுமைப் பண்பானது, இவரின் மறையறிவிப்பு மிகுந்த விளைச்சலைக் கொடுக்க வழி சமைத்தது. இவரின் தூய்மையும் பணியார்வப் பண்பும் பலரை இவர்பால் ஈர்த்தது. கலாத்தியர்கள் இவருக்காக தம் கண்களை முதலாக பிடுங்கிக்கொடுக்க தயாராக இருந்தார்கள் (கலா 4:15). கொரிந்து

பட்டண மக்கள் பவுலைக் காண ஏக்கத்தோடும், துயரத்தோடும், ஆர்வத்தோடும் காத்திருந்தார்கள் (2கொரி 7:2-5). மிலேத்துவிலே பவுலை இனிக்காணமாட்டோம் என அறிந்து எபேசு மூப்பர்கள் கண்ணீர் விட்டு கதறி அழுதார்கள் (திப 20:36-38). பவுலடிகளாரின் அர்ப்பணிப்பையும் தன்னலமற்ற பணிவாழ்வையும் கண்டு பிலிப்பியர்கள் அவரோடு ஆழமாக இணையப் பெற்றார்கள் (பிலி 1:3-26) ஏனெனில் நற்செய்தியின் பொருட்டு இவர்களுக்காக தன்னை முதலாக கையளிக்க பவுல் துணிந்தார். மறையறிவிப்பிலே தன்னை இழந்து இயேசுவை அளிக்கும் இவரின் இவ் நுட்பத்தினை பல மறைபரப்பாளர்கள் தம் வாழ்விலே கையாண்டு வெற்றிபெற்றார்கள்.

பவுல் அடிகளார் தன்னுடைய தேவைகளுக்காக அவர் யாரிடமும் தங்கியிருக் கவில்லை. எவருக்கும் சுமையாக இராதபடி இரவு பகலாய் வேலைசெய்து கொண்டே கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றினார். (1தெச 2:8-9)கூடாரத் தொழிலாளியாக தன் தேவைகளுக்காக தானே உழைத்தார். (தி.ப 18:1-4) ஓர் மறைபரப்பாளனாக, புது மறையினைத் தழுவிய கிறிஸ்தவர்களை தாயைப் போல கரிசனையுடனும், அன்புடனும் பேணிக்காத்து அவர்களின் ஆன்மீக வாழ்விற்கு ஊட்டமளித்தார்.

## ஒவ்வொரு சபையைப்பற்றிய தெளிவான அறிவு

பவுல் தரிசித்த ஸ்தாவித்த சபைகளைப்பற்றி தெளிவான அறிவினைக் கொண்டிருந்தார். அவர்களின் முக்கியமான செயற்பாடுகள், அவர்களின் கலாச்சார பின்னணி முக்கியமாக அவர்களின் வேர்கள் என்பவை பற்றிய தெளிவான அறிவு மறையறிவிப் பின் சிறப்பான நுட்பமாக அவருக்கு உதவியது. தனியே சபைகளை ஸ்தாபிப்பதோடு மட்டும் நின்றுவிடாது அவர்களின் விசுவாச உருவாக்கலிலே பவுல் மிகுந்த கரிசனை கொண்டிருந்தார். தொடர்ச்சியான தனது திருமுகங்களினூடாக அவர்களுக்கு தேவையான அறிவுரைகளையும் உறுதிப்பாட்டையும் வழங்கினார். சபைகளுக்கு பொருத்தமான மூப்பர்களை தேர்ந்தெடுத்தார் (தி.ப 14:23). அவர்களுக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்கினார் (தி.ப 20 17-38). சபைகளின பிரச்சினைகள் மிகுந்த கரிசனையோடு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன என்பதற்கு யெருசலேம் சங்கம் ஓர் சிறந்த உதாரணம் ஆகும் (தி.ப 15). இவ்வாறு சபைகளைப்பற்றி தெளிவான அறிவினை கொண்டிருந்த பவுல் அடிகளார் ஓர் திருத்தூதனாக, நல்ல மேய்ப் பனாக நின்று இறைவழியிலே சபைகளை நெறிப்படுத்தினார்.

## துன்பங்களைத்தாங்கும் மனத்துணிவு

பவுல் அடிகளார் தனது மறை அறிவிப்பிலே பல தடைகளையும் சவால் களையும் சந்தித்தார். பல்வேறு காரணங்களால் அவர் மீது வெறுப்பு கொண்டவர்

களால் ஊரைவிட்டும் நகரைவிட்டும் துரத்தப்பட்டார். நற்செய்திக்காக அவர் தாங்கிக்கொண்ட வேதனைகளின் தொடர் கதையினை கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாவது திருமுகத்திலே விபரமாக விளக்குகின்றார். (காண்க 2கொரி 1:3; 4:7-12; 6:4; 11:23; 12:1) இவ்வாறாக இறையரசிலே நுழைவதற்கு முன்னதாக நாம் பல வேதனைகளை, தடைகளை தாண்ட வேண்டும் என்பதை தன்னுடைய தூதுரைப்பயணங்கள் ஊடாக பவுல் சபைகளுக்கு கற்பித்தார். (தி.ப 14:22) எத்தகைய துன்பங்களை எதிர்கொண்ட போதிலும் தனது மறையறிவிற்பு பணியிலே பவுல் அடிகளார் பின்வாங்கவில்லை.

## ஊழியர்களுடனான தொடர்பு

நற்செய்தி அறிவிப்பிலே பல உடனுழைப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றியதை பலமுறைகளிலே தனது திருமடல்களிலே பவுலடிகளார் குறிப்பிடுகின்றார். உதாரணத்துக்கு அப்பல்லோ என்கின்ற பெயரானது கொரிந்து சபைக்கு அவர் எழுதிய கடிதத்திலே பலமுறை வருகின்றது. பவுலின் வட்டத் திலே மூன்றுவகையான உடனுழைப்பாளர்களை நாம் கண்ணோக்க முடியும் முதலாவதாக அவருடன் நெருக்கமான உடனுழைப்பாளர்கள் என்ற வரிசையிலே பர்ணபா, சிலா, திமோத்தேயு என்போரையும் இரண்டாவதாக சுதந்திரமான உடனுழைப்பாளர்கள் என்ற ரீதியிலே அக்கிலா, பிரிஸ்கில்லா, தீத்து என்போரையும் மூன்றாவதாக சபைகளின் பிரதிநிதிகளாக உடனுழைப்பில் ஈடுபட்டோர் என்ற வகையில் எப்பப்பிராத்து, காயு, டிமாஸ், அரிஸ்தாஸ்கு என்போரை யும் குறிப்பிடலாம். இவர்களோடு பவுலடிகளார் தன் பணிகளை பகிர்ந்து கொண்டதோடு மட்டும் நின்றுவிடாது தனக்கு பின்னாக சபைகளைப் பராமரிக்க வும் அவைகளை விசுவாசத்தில் கட்டி எழுப்பவும் பவுல் இவர்களை தயார்ப்படுத் தினார்.

## முடிவுரை

தமஸ்கு அனுபவத்திலே இயேசு ஆண்டவரை சந்தித்த பவுல் தன்னிலை யிலே இருந்து முற்றுமுழுதாக மாற்றமடைந்து இயேசு ஆண்டவருக்காக தன்னையே முழுவதும் அர்ப்பணித்தார். ஓர் மறைபரப்பாளனாக அவரின் வாழ்வை நோக்குமிடத்து இயேசு ஆண்டவர் மீது அவர் கொண்டிருந்த ஆழமான அன்பு நமக்கு புலப்படுகின்றது. தன்னையே முழுவதும் இயேசு ஆண்டவருக்கு அர்ப் பணித்தவராக தனது முழு ஆற்றல் திறமைகளையும் நற்செய்தி அறிவிப்பிற்கா கவே அர்ப்பணித்தார். ஓர் மறைபரப்பாளனாக, ஜோதியாக, வழிகாட்டியாக, பவுலடிகளார் யாரோடும் சமாந்தரப்படுத்தப்பட முடியாதவர். இவ்வகையிலே மறையறிவிப்பிலே இவர் கையாண்ட நுட்பங்கள் தலைசிறந்தவை, அனைவராலும் பின்பற்றப்படுபவை.

# பவுலின் ஆன்மீகம்

அருட்சகோதரன். தி. குயின்சன் பெர்னான்டோ

## முன்னுரை

பவுல் அடிகளாரின் ஆன்மீகம் ஆழமானது. முழு மனித விடுதலையை மையமாகக் கொண்டது. கிறிஸ்துவின் விழுமியங்கள் அனைத்தையும் தன்னுள் கொண்டது. முதலில் கிறிஸ்தவ ஆன்மீகத்தின் சில விடயங்கள் எவ்வாறு பவுலின் வாழ்வில் பிரதிபலித்தன என்பதை பாக்கும் போது பவுல் அடிகளாரின் கடிதங்களே இதற்கு சான்றாக அமைகின்றன. பவுல் அடிகளாரின் சிந்தனை களை அறிய வேண்டுமாயின் நாம் அவரின் ஆன்மீகத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். எனவே கிறிஸ்தவ ஆன்மிகத்தின் வரலாற்றை உற்று நோக்கும் போது

1) **யூதர்களின் ஆன்மீகம்:**

மோசேயின் வழிநடத்தலில் இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலையாக சீனாய் மலைக்கு பயணமாகி, அங்கே கடவுள் (யாவே) அவர்களோடு உடன் படிக்கை செய்து கொண்ட வரலாற்று நிகழ்ச்சியே யூத ஆன்மீகம் உருவாக, வளர வாய்ப்பாய் அமைந்தது.

2) **கிறிஸ்தவ ஆன்மீகம்:**

இயேசுவின் உயிர்ப்பே கிறிஸ்தவ ஆன்மீகத்தை உருவாக்கி, உருப் பெறச் செய்தது.

3) **தொடக்கத் திருச்சபை ஆன்மீகம்:**

இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைபொருளில் தனிப்பட்ட முறையில் பங்கு கொள்வதில்தான், ஆதித் திருச்சபையின் ஆன்மீகம் பெரிதும் அடங்கி இருந்தது.

4) தூய பவுலடியாரின் ஆன்மீகம்:

ஆண்டவரின் ஆவியாரின் வழிநடத்தலில் வாழும் வாழ்வுதான் பவுல் அடிகளார் காட்டிய ஆன்மீகம். இதன் தாக்கம் 5ம் நூற்றாண்டிலும் இருந்தது.

5) கத்தோலிக்கத் திருச்சபையின் ஆன்மீகம்:

இன்று கத்தோலிக்கத் திருச்சபையில் ஆன்மீகம் குறிப்பிடுவது என்னவெனில் விண்ணகத் தந்தையும், உயிர்த்த இயேசுவும் கொடுத்த தூய ஆவியாரால் வழிநடத்தப்படுவதே ஆகும். இந்த ஆன்மீகம்தான் ஒவ்வொரு சகோதரனையும் சகோதரியையும் விண்ணகத் தந்தையின் குழந்தைகளாக கிறிஸ்துவின் மறுபதிப்புக்களாக ஆக்குகின்றது.

லூக்கா எழுதிய திருத்தூதர் பணிகள் நூலில் தூய பவுலை முதன்மைப் படுத்தி தொடக்க திருச்சபையில் அவரின் பங்கை சிறப்பாக விளக்கி நிற்கின்றார். பவுல் தனது அழைத்தலின் மூலம் தனது பணியின், பயணத்தின் இலக்கு என்ன என்பதை தெளிவாக புரிந்து கொண்டார். "...அவர் பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் எனது பெயரை எடுத்துச் செல்லும் கருவி (தி.ப 9:15). எனவே, இலக்கு தெளிவாகியதால் அவரது பணியும் பயணமும் அதை சார்ந்த ஆன்மீகமும் தெளிவாகிறது. எனவே தான் மூன்று தூதுரைப் பயணத்தில் ஏறக்குறைய 1280கி.மீ. பயணம் செய்துள்ளார். பெரும்பாலும் கால் நடையாகவே சென்றிருக்கிறார்.

## ஒரே கடவுள் ஆன்மீகம்

பவுல் அடிகளாரின் ஆன்மீகத்தில் உள்ள ஒரு சிறப்பு, வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நற்செய்தியை அறிவிப்பதும் இறையரசை, திருச்சபையை கட்டியெழுப்புவது மாகும். தனது தூதுரைப் பயணத்தில் ஊருக்கும், நகரத்திற்கும் சென்றால் அங்கு யூதர்களை சந்திப்பதும் (தி.ப 13:5; 13:14; 14:1) அவர்களது செபக்கூடங்களில் இயேசுவே மெசியா என்று அறிவிப்பதுமாகும். அவர்கள் இவரை ஏற்றுக் கொள்ளாத போது பிற இனத்தவரிடம் சென்று போதித்தார். இது ஒரு நல்ல அணுகுமுறையாகும். தனது போதனையில் கூட சிறந்த அணுகுமுறையைக் கையாளுகிறார். யூதர்களுக்கும், பிற இனத்தாருக்கும் இயேசுவைப் பற்றிய உண்மைகள் சான்றாக இருந்தாலும் இருவருக்கும் உள்ள ஆரம்பம்

**அனைவரும் ஒரே கடவுளின் பிள்ளைகள் என்ற அவரது அனுபவ ஆன்மிகத்தைக் காட்டுகிறது.**

வேறாக இருந்தது. யூதர்களுக்கு ஆபிரகாமும் பிற இனத்தாருக்கு ஆதாமுமாக இருந்தது. பவுலின் இந்த அணுகுமுறை மக்கள் அனைவரும் ஒரே கடவுளின் பிள்ளைகள் என்ற அவரது அனுபவ ஆன்மிகத்தைக் காட்டுகிறது. தூய பவுல் தான் எழுதிய கடிதங்களில் தந்தை, மகன், தூய ஆவியை மையப் படுத்தியே கடிதங்களை எழுதுகின்றார். பவுல் கடிதங்களை எழுதும் போது தொடக்கத்திலே இறைவனை வாழ்த்தி அவரின் துணையோடு தான் உருவாக் கிய திருச்சபைகளுக்கு கடிதங்களை எழுதுகின்றார். கடவுள் யேசு கிறிஸ்துவின் தந்தையென்றும் தான் அறிவிப்பது கடவுளின் நற்செய்தியென்றும் மிக ஆணித் தரமாக எடுத்துரைக்கின்றார் (உரோ 1:1). கடிதங்கள் மூலம் விசுவாசத்தில் உறுதிப்படுத்திய குழுமங்களை கடவுளின் திருச்சபையென அழைக்கின்றார் (1கொரி 1:2; 2கொரி 1:1). கடவுள்தான் சமாதானத்தினதும், அருளினதும், எல்லா ஆசீர்வாதங்களினதும் ஊற்றும் உறைவிடமுமாகும் என குறிப்பிடுகிறார் (கலா 1:3; எபே 1:2-3). தொடக்க வசனத்திலே கடவுளுக்கு நன்றி கூறியே தனது கடிதங்களை எழுதுகிறார் (பிலி 1:3-4). இவ்வாறு ஒரே கடவுளை மையப்படுத்திய பவுலின் ஆன்மீகம் அவரது வாழ்விலே வெளிப்படையாக பிரதிபலிப்பதைக் காண்கின்றோம்.

## துன்பங்களில் தளரா ஆன்மீகம் (Spirituality of the Cross)

இறையரசுப் பயணத்தில் பவுலைப் போல துன்பப்பட்டவர் யாரும் இலர். இதைப் பவுல் அடிகளாரே பல இடங்களில் தனது மடல்களில் கூறியுள்ளார் (2கொரி 4:8-12; 6:4-10; 11:22-29). திருத்தூதர்ப் பணிகளிலும் லூக்கா இதை தெளிவு படுத்திப் பட்டியலிடுகின் றார். பவுலின் துன்பங்கள் எல்லாம் இறையரசின் விழுமியங் களுக்காகவே என்பதை லூக்கா தெளிவு படுத்துகிறார். தன் இன மக்களே தனக்கு எதிராக சதி செய்வதையும், துன்பங்கள் தருவதையும், ஊரைவிட்டு விரட்டுவதையும் தளரா உள்ளத்துட னும் உறுதியுடனும் எதிர் கொள்வது அவரது ஆன்மீகத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. இயேசு எப்படி மன உறுதியுடன் துன்பங்களை எதிர் கொண்டாரோ அவ்வாறே பவுலும் மேற் கொண்டார் என்றும் இயேசுவின் ஆன்மீகத்தையே இங்கு பவுல் பிரதி பலிக்கின்றார் என்பதையும் நாம் காணலாம். "என் பெயரின் பொருட்டு அவர் எத்துணை துன்புற வேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக் காட்டுவேன்". (தி.ப9:16) என்ற உயிர்த்த கிறிஸ்து இயேசுவின் வார்த்தையை தனது பணிவாழ்வில் எதிர்கொள்ள தயாராய் இருந்தார். பவுல் தன்னுடைய வாழ்விலே

**"என் பெயரின் பொருட்டு அவர் எத்துணை துன்புற வேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக் காட்டுவேன்".**

பல்வேறு துன்பங்களை எதிர்கொண்டார், ஆனால் அவர் மனம் தளரவில்லை மாறாக மற்றவர்களையும் ஊக்கப்படுத்தினார். எபேசில் மூப்பர்களுக்கு இவ்வாறு கூறுகின்றார். "நான் ஆசியாவுக்கு வந்து சேர்ந்த நாள்முதல் இந்நாள்வரை எவ்வாறு உங்களிடம் நடந்துகொண்டேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். யூதர்களுடைய சூழ்ச்சிகளால் எனக்கு ஏற்பட்ட சோதனைகளின்போது மிகுந்த மனத்தாழ்மையோடும் கண்ணீரோடும் ஆண்டவருக்குப் பணிபுரிந்தேன். (தி.ப 20:18-19) இவ்வாறு துன்பங்களிலே தளராத பவுலின் ஆன்மீகம் மற்றவர்களையும் கவர்ந்து இழுக்கும் சக்தி வாய்ந்ததாய் இருக்கிறது. தூய பவுல் நாங்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள் எம்மை சிறப்பான வழிக்கு அழைத்து செல்கின்றது என்பதை உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிடுகின்றார். அதாவது "துன்பங்களைத் தாங்கிக் கொள்வதிலும் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம். ஏனெனில், துன்பத்தால் மன உறுதியும், மன உறுதியால் தகைமையும், தகைமையால் எதிர்நோக்கும் விளையும் என அறிந்திருக்கிறோம். அந்த எதிர்நோக்கு ஒரு போதும் ஏமாற்றம் தராது. ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது" (உரோ 5:3-5) மேலும் பவுல் சொல்வார் "இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்க்காலத்தில் நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை என நான் எண்ணுகிறேன்" (உரோ 8:18). எனவே பவுலின் ஆன்மீகம் துன்பங்களை எதிர்கொண்டு இறை மாட்சியில் பங்குபெற அழைக்கின்றது.

## தூய ஆவியால் செயல்பட அழைக்கும் ஆன்மீகம்

பவுலடியார் தூய ஆவியில் வாழ்ந்தது, இன்றைய எமது ஆன்மீக வாழ்வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. எனவே பவுல் "கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல" (உரோ 8:9) என்றும் "கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்" (உரோ 8:14) என்றும் "கடவுளின் பிள்ளைக்குரிய மனப்பான்மையை பெற்றுக்கொண்டீர்கள் அதனால் நாம் 'அப்பா தந்தையே' என அழைக்கிறோம்" (உரோ8:15) என்றும் கூறுவார். தூய பவுல் தனது பணி வாழ்வில் பல சவால்களை எதிர்கொண்டபோதும் தூய ஆவியானவர் அவரைத் தைரியப்படுத்தி பணியை சிறப்பான முறையில் செய்ய உதவினார். இதை ஆழமாக ஏற்றுக்கொண்ட பவுல் தூய ஆவியால், தான் வழிநடத்தப்பட தன்னை அர்ப்பணிக்கின்றார். பவுல் தனது தோழர்களுடன் ஆசியாவில் பல இடங்களில் இறையரசை நிறுவ ஆவல் கொள்கிறார். ஆனால் ஓர் இரவு ஆவியார் பவுலுக்கு காட்சியளித்து மாசிதோனியாவுக்கு செல்ல பணிக்கிறார். பவுலும் தனது விருப்பு வெறுப்புக்களை அகற்றி,

> **"கடவுளின் ஆவியால் இயக்கப் படுகிறவர்களே கடவுளின் மக்கள்"**

ஆவியானவர் சொன்னபடி மாசிதோனியாவுக்கு முழுமனதுடன் செல்கிறார். இறையரசிற்காக ஆவியானவரின் வழிகாட்டலில் தன்னையே கையளித்து, தனது விருப்பு வெறுப்புக்களை இழக்கிறார் (தி.ப 16:6-11). இதைத்தான் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் இயேசுவின் பொருட்டு அனைத்தையும் இழந்து விட்டதாகவும் மற்ற எல்லாவற்றையும் குப்பையெனக் கருதுவதாகவும் கூறுகிறார் (பிலி 3:8). எனவே தூய பவுல் தூய ஆவியின் வழிநடத்தலுக்கு தன்னை முழு வதும் கையளிப்பதின் மூலம் ஆவியால் செயற்பட கையளிக்கும் ஆன்மீகத்தை தனது வாழ்வாக்கி மற்றவர்களையும் அவ்வாறு வாழ அழைப்பு விடுக்கின்றார்.

## வெற்றி தோல்விகளை சமமாக கணிக்கும் ஆன்மீகம்

பவுல் தனது இரண்டாவது தூதுரைப் பயணத்தில் எதென்ஸ் நகர் சென்றடைகிறார். முதல்முறையாக இறைவார்த்தை கிரேக்க மொழி பேசும் உலகிற்கு, அறிவுக்களமாக விளங்கிய இடத்தைச் சேருகிறது. பெரும்பாலும் எல்லாரும் படித்த அறிஞர்கள். அவர்களிடம் பவுல் இயேசுவைப் பற்றியும், அவரது விழுமியங்கள் பற்றியும். அவரது உயிர்ப்பு பற்றியும், மனித பண்பாட்டுமுறை பற்றியும் உரை நிகழ்த்துகிறார். இறுதியில் அவாகளில் பலர் பவுலை ஏளனம் செய்தனர் (தி.ப 17:32). ஒரு சிலர் மீண்டும் இதைப்பற்றி வந்து பேசும் என்றனர் (தி.ப 17:32) ஒரு சிலர் அவரில் நம்பிக்கை கொண்டனர் (தி.ப17:34) எனவே ஏதென்சில் பவுலுக்கு ஏமாற்றமே அதிகம் இருந்தது. இருந்தாலும் தனது உறுதியை இவர் இழந்து விடவில்லை, தொடர்ந்து போதித்தார்

## நம்பிக்கைக்கு வித்திடும் ஆன்மீகம்

கொரிந்து நகரில் அவர் திருச்சபையை நிறுவினார் (தி.ப 18:1-11) இவரது முயற்சியால் பலர் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டு திருமுழுக்கு பெற்றனர். அப்போது பொறாமையால் தூண்டப்பெற்று யூதர்கள் அவருக்கும் சீலாவுக்கும் தொந்தரவு தந்தனர். மிகவும் மனமொடிந்து போகிறார் பவுல். அப்போது ஓரிரவு ஆண்டவர் பவுலுக்கு கனவில் தோன்றி “அஞ்சாதே போதித்துக் கொண்டேயிரு நிறுத்திவிடாதே. நான் உன்னுடன் இருக்கிறேன். உனக்குத் தீங்கிழைக்க எவரும் எதிர்த்தெழ மாட்டார்” (தி.ப 18:9-10) என்று கூறுகிறார். வீரமான நம்பிக்கையுடன் தொடர்ந்து பயணம் செய்கிறார் பவுல். தனது போதனையில் சாதனை செய்கிறார் பவுல். பவுல் அடிகளாரின் இந்த நம்பிக்கை

> “அஞ்சாதே போதித்துக் கொண்டேயிரு நிறுத்திவிடாதே. நான் உன்னுடன் இருக்கிறேன். உனக்குத் தீங்கிழைக்க எவரும் எதிர்த்தெழ மாட்டார்”

ஆன்மீகம் அவரை உரோமையில் இயேசுவுக்காக உயிரை இழக்க செய்தது.

## பாசமிகுந்த தந்தை – பரிவுள்ள ஆயன் ஆன்மீகம்

பவுல் தனது மூன்றாவது தூதுரைப் பயணத்தில் ஏபேசு நகரத்து மூப்பர்களிடம் பிரியாவிடை பெறுகிறார். அப்போது அவர் பேசியது அவரது ஆன்மீகத்தை நமக்கு படம்பிடித்து காட்டுகிறது. இயேசு இராவுணவின் போது எவ்வளவு உருக்கமாக தன் சீடர்களிடம் பேசினாரோ, அதே அளவிற்கு பவுல் அடிகளாரும் ஏபேசு நகரத்து மூப்பர்களிடம் பேசுகிறார். தனது சீடர்களிடம் எதிர்காலத்தைப் பற்றி இயேசு எவ்வளவு எதிர்பார்ப்போடு, ஆர்வமாக இருந்தாரோ, அதே அளவிற்கு இங்கு பவுல் இருக்கிறார். இராவுணவின் போது எவ்வாறு இயேசு தன் சீடர்களுக்கு பாசமிகு தந்தை போலும் பரிவுள்ள ஆயன் போலும் அறிவுரை கொடுத்து செயல்பட்டாரோ அதே போல ஏபேசு நகர மக்களுக்கு பவுல் தனது அன்பின் வாழ்த்துக்களையும் அறிவுரைகளையும் தெரிவிக்கிறார். எதிர் காலத்தில் எப்படி யெல்லாம் அவர்கள் இறையரசில் ஒழுக வேண்டும் என்று கண்ணீர் மல்க அறிவுரை கூறி அவர்களுடன் கூடி செபித்து பிரியாவிடை பெறுகிறார். இதுதான் மக்கள் மீது அவர் கொண்ட பாசத்தையும், பரிவையும், பொறுப்பையும் வெளிக் காட்டும் ஆன்மீகமாக உள்ளது (தி.ப 20:17-38).

## முடிவுரை

பவுலின் வாழ்வில் அவரது ஆன்மீகம் எப்படிப்பட்ட பங்கு வகித்தது எனப் பார்த்தோம். அவரே தனது பயண அனுபவங்களை, தனது கொள்கைகளை, தனது வாழ்க்கையின் எதிர்நோக்கினை எல்லாம் தனது மடல்களில் ஏராளமாக எழுதியுள்ளார். அவைகளையும் இவற்றோடு இணைத்துப் படித்தால் பவுலின் முழு ஆன்மீகம் புலப்படும். இயேசுவுக்காக அவரது இறையரசிற்காக எதையும் இழப்பதே பவுலின் நிரந்தர ஆன்மீகம். இக்காலக் கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு பெரிய சவால்.

## உசாத்துணை நூல்கள்


1. Ferdinand Hahn, "Mission in the New Testament", London: SCM, 1965, p 68
2. Joseph Arikuzhikattil, "The Missionary Strategy of Apostle Paul", Mission today, Vol. XI, No. 2, p.131-135

# புனித சியென்னா கத்தரீனம்மாள்

அருட்சகோதரன் ப.பத்தினாதர்

இவர் இத்தாலி நாட்டில் டஸ்கனியிலுள்ள சியென்னா என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தகப்பனார் ஜேம்ஸ் பெனின்காசா, கம்பிளி ஆடைகளுக்குச் சாயம் இடும் பணியைச் செய்து வந்தார். தாய் லாபா குழந்தை கத்தரீன் மேல் அதிகப் பாசம் வைத்திருந்தார்.

கத்தரீனுடைய 15வது வயதில் பெற்றோர் அவளுக்கு திருமணம் முடித்துவைக்க விரும்பினர். ஆனால் கத்தரீன் அதற்கு உடன்படவில்லை. வீட்டிலுள்ள அறை ஒன்றில் அவள் வெகு நேரம் செபத்தில் ஈடுபட்டிருந்தாள். பிற்பட்ட காலத்தில் ஏழைகள், நோயாளிகள், துயருறுவோர், சிறைக்கைதிகள் இவர்களை சந்தித்து ஆறுதலளித்து வந்தாள். தமது 18வது வயதில் புனித சாமிநாதருடைய மூன்றாம் சபையில் சேர்ந்து துறவியானார். மூன்று ஆண்டு காலமாக இறைவனோடும் தம் ஆன்ம குருவோடும் தவிர வேறு எவரோடும் பேசாமல் மௌனம் காத்தார்.

பலமுறை சாத்தான் இவரைச் சோதித்திருந்தது. ஒரு முறை வெகு நேரம் சாத்தானுடன் போராடிய பின் இயேசு ஆண்டவர் இவருக்குக் காட்சியளித்தார். அப்போது கத்தரீன் ஆண்டவரே நீர் இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தீர்? என்று கேட்டார். அதற்கு ஆண்டவர் நான் உன் உள்ளத்தில் தான் இருந்தேன் என்றார். என்ன! ஆபாச எண்ணங்கள் நிறைந்த என் உள்ளத்திலா இருந்தீர்? எனக் கேட்டார். ஆம், அந்த இழிவான எண்ணங்கள் எதுவும் உனக்குப் பிடிக்கவில்லைதான். அவற்றோடு போரிட உனக்கு உதவி புரிந்தவன் நான்தான் என்றார்.

நோய் மிகவும் முற்றின நிலையில் யாராலும் கைவிடப்பட்ட நோயாளிகளை கவனிப்பதில் கத்தரீன் மிக்க அக்கறை காட்டினார். ஒருமுறை நகர அதிகாரிகளால் நகருக்கு புறந்தள்ளப்பட்ட ஒரு நோயாளியை அவளின் இறுதி

நாட்களில் கவனித்து அவளுக்கு பணிவிடை செய்து வந்தார். ஆனால் கத்தரினுக்கு கிடைத்த கைமாறு வசை மாரியும் திட்டும்தான். இவை தவிர நான் வேறு எந்தக் கைமாறும் எதிர்பார்க்கலாகாது என்பதுதான் இப்புனிதையின் கருத்தும்.

இவர் இறப்பதற்கு முன் இறைவனிடமிருந்து பற்பல வரங்களைப் பெற்றார். அவற்றுள் ஒன்றுதான் ஐந்து காயவரம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் ஆண்டவரிடம் கேட்டுக் கொண்டதின் பேரில் அந்தக் காயங்கள் வெளியே மனிதருக்குத் தெரியாமல் உள் காயங்களாகவே இருந்தன.

இவர் பெற்ற மற்றொரு வரம் திவ்விய நற்கருணையை மட்டுமே தம் தினசரி உணவாகக் கொண்டு வாழ்ந்தது. திருநீற்றுப் புதன் முதல் ஆண்டவருடைய விண்ணேற்ற விழா வரை ஏறத்தாழ 88 நாட்கள் வேறு எந்த உணவுமின்றி திவ்விய நற்கருணை மட்டுமே அருந்தி வாழ்ந்தார்.

இவ்வாறு தவமே வாழ்வாகக் கொண்டு வாழ்ந்த இப்புனிதைக்கு ஆண்டவர் ஒரு முறை காட்சி கொடுத்தார். அவர் இரு முடிகளுடன் இப்புனிதைக்கு முன் தோன்றினார். அவற்றுள் ஒன்று மணிமுடி மற்றது முள்முடி. ஏதை வேண்டுமானாலும் அவர் எடுத்துக்கொள்ளலாம். மணிமுடியை எடுத்தால் வாழ்வு வளமுள்ளதாக இருக்கும். இன்பம் நிறைந்ததாக இருக்கும். முள் முடியை எடுத்தால் வாழ்வு துன்பம் நிறைந்ததாக இருக்கும். இப் புனிதை எதை எடுப்பது என்று சற்றும் தயங்கவில்லை. முள் முடியை எடுத்துத் தம் தலையில் தாமே அழுத்திக்கொண்டார்.

இப்புனிதை எழுதியுள்ளவை ஆறு நூல்களும் 364 கடிதங்களும். சிறந்த கருத்துக்கள் நிறைந்த இந்நூல்கள் இவருடைய புத்திக் கூர்மைக்கு சான்றுகளாக திகழ்கின்றன. இயேசுவின் திரு இருதயப் பக்தியை பரப்புவதில் ஆர்வமுடன் உழைத்தவர்களுள் புனிதை சிறப்பானதோர் இடம் பெற்றிருக்கின்றார். இவர் தமது 33வது வயதிலேயே உரோமைப் பெருநகரில் 1380 ஏப்ரல் 29 ஆம் நாள் இறந்தார். 1970ம் ஆண்டில் திருத்தந்தை ஆறாம் பவுல் இப்புனிதைக்கு மறைவல்லுநர் பட்டம் வழங்கினார்.

# "திருச்சபை வரலாற்றுத் துளிகள்"



அமரர் சா.பி. கிருபானந்தன் அடிகள் மரணிப்பதற்கு முன்னதாக தமிழ் கத்தோலிக்க திருச்சபைக்கு "திருச்சபை வரலாற்றுத் துளிகள்" என்ற தலைப்பில் ஒரு அரும் பொக்கிஷத்தை தயாரித்து வெளியிட்டிருக்கின்றார். அவருடைய இந்த முயற்சியால் இறையியல் கோலங்கள் வாசகர்கள் பயன்பெறும் வகையில் சில துளிகளை எமது இதழ்களில் தொடராக தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு

8 டிசம்பர் 1993 திருத்தந்தை 2ம் யோவான் பாவிலு கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏட்டை இறைமக்களுக்கு வெளியிட்டார். முன்னுரை, மற்றும் திருத்தந்தையின் மறைக்கோட்பாடு ஆணைக்குழுவின் தலைவரான கருதினால் யோசப் இரட்சிங்கர் தலைமையில் 12 கருதினால்களையும் ஆயர் களையும் கொண்ட குழுவுக்கு 1985 அனைத்துலக ஆயர் பேரவை கையளித்த தோற்றுவாயையும் கூர்ப்பையும் மீள்வுணரும் பிடெயுஸ் டிப்போசிற்றும் (அதாவது விசுவாசத்தின் பதிவு) என்ற திருத்தூதுவ மறைகோட்பாடு மடலோடு வெளி வந்துள்ளது. முறைக்கல்வித் துறையில் விற்பன்னரான 7 மறைமாவட்ட ஆயர் களும் இதில் பங்கு பற்றினர். ஆஸ்திரிய இறையியாளர் கிறிஸ்தோபர் வொன் செஷன் போர்ன் முக்கிய இடத்தை வகுத்தார். இரண்டாம் வத்திக்கான் சங்கத் தின் பின்னர் மறைகோட்பாடுகளின் சுருக்கத்தை தெளிவாகவும் விளக்கமாகவும் தரும் முயற்சி என பெரிதும் விதந்துரைக்கப்பட்டதாகும்.

நாம் பெரிதும் அறியப்பட்ட 2ம் வத்திக்கான் சங்கம் முடிவடைந்த பின்னர் டச்சு ஆயர் பேரவை வெளியிட்ட டச்சு மறைக்கல்வி ஏட்டையோ, உரோமை மறைக்கோட்பாட்டு ஆணைக்குழுவோடு இணைந்து வெளியான பிரான்ஸ் நாட்டு ஆயர் பேரவையின் முதியோர் மறைக்கல்வி ஏட்டையோ அல்லது யேர்மன் ஆயர் பேரவையின் முதியோர் மறைக்கல்வி ஏட்டையோ தவிர்த்து புதிய திட்டமைப்பு பின்பற்றப்பட்டுள்ளது.

1. திருமுழுக்கு அறிக்கையில் விசுவாசம்
2. அருளடையாள வாழ்வில் விசுவாசம்
3. வாழ்வில் விசுவாசம்
4. மன்றாட வாழ்வு

என்ற நான்கு அம்சங்களைக் கொண்டுள்ளது.

விசுவாசம், இறைவெளிப்பாடு, சென்மபாவம், கிறிஸ்தியல், மரிபற்றிய இறையியல் தூய ஆவி இவற்றோடு நவீன காலத்தில் திருச்சபைக்கு சவாலான பல கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன.

இப்பகுதியே பெரிய பகுதியாக உள்ளது. வழிபாடு பற்றிய பகுதி விசாலமானதும் தெளிவானதுமாகும். வழிபாட்டை உயிரோட்டமாக விளங்கிக்கொள்ள உதவுகின்றது. நற்கருணை திருச்சபையில் உச்சமும் வளமும் என்ற விபரிப்பு இந்நூலில் இன்னொரு சிறப்பாகும். அதனால் மறைமெய்மை பற்றி தெளிவான ஒரு சமச்சீரான விளக்கத்தை தருகின்றது. இதே போன்று மனித ஒழுக்கவியலில் மனித மாண்பை முதன்மைப்படுத்துகின்றது. மன்றாட்டுப் பகுதியில் இயேசு கற்பித்த மன்றாட்டு பற்றிய விளக்கம் புதிய பரிமாணத்தை தருவதோடு உண்மையான பக்தியை தெளிவாக்குகின்றது. பிரான்ஸ், பெல்ஜியம், ஐக்கிய அமெரிக்க நாடுகளில் திருச்சபை தந்தையர்களில் ஏற்பட்ட புதிய கருத்துக்கள், விவிலிய ஆய்வால் உருவான சிந்தனைகளால் இரட்சணிய வரலாறு பற்றிய எண்ணக்கரு, கீழைத்தேய மரபு மீறாத் திருச்சபைகள் பற்றிய புதிய அறிதல், மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்பு போன்றவற்றையும் இவ்வேடு கருத்தில் எடுத்துள்ளது.

## கத்தோலிக்கர்

விசுவாச அறிக்கையிலும் அருளடையாளங்கள் ஏழு என்ற வரையறை யில் கொண்டாடுவதிலும், திருத்தூதுவ வழிமுறையான வரலாற்றுப் பூர்வீகத்தை ஏற்று அனைத்துலக திருச்சபையோடு உளப்பூர்வமாக இணைந்துள்ளவர்களை கத்தோலிக்கர் என வரையறுப்புச் செய்யலாம் என்று புதிய திருமறைச் சுவடி குறிப்பிடுகின்றது.

## கல்டியன் சடங்கு முறை

தற்போதைய ஈரான், ஈராக் நாட்டு மக்கள் அசிரியன்கள் என்றே அறியப்பட்டனர். தொடக்கத்திலிருந்தே திருச்சபை உருவானபோதும் 5வது

நூற்றாண்டில் நெஸ்தோரிய திரிபுக் கொள்ளையால் ஈர்க்கப்பட்டனர். பல மறைப் பணி முயற்சியால் மீண்டும் உரோமை ஒன்றிப்புக்கு திரும்பி வந்தார்கள். 1553ல் திருத்தந்தை 3ம் யூலியஸ் கல்டியன் திருச்சபையின் முதல் மறைத்தந்தையை அறிவித்தார்.
விவிலியத்தின்படி கல்டியன்கள் பபிலோனிய தேசத்தவராகும். தற்போது கல்டியன் மறைத்தந்தை ஈராக், பக்தாத் நகரத்தில் தனது தலைமையகத்தைக் கொண்டுள்ளார்.

## கல்வீனசம்

இலங்கையில் டச்சு ஆட்சியின் போது பரப்பப்பட்ட ஆட்சியாளர்களின் சமயமான இதை இறப்பிறமாது மதம் என குறிப்பிடுவர். இது ஒரு சீர்திருத்த வாதக் கிறிஸ்தவ மதப்பிரிவாகும். பிரெஞ்சு சீர்திருத்தவாதி ஜான் கல்வின் (1509 - 1564) கத்தோலிக்க போதனைக்கு எதிராக குறிப்பாக மூத்தோர் கொள்கைகளை மறுத்து இப்பிரிவினைவாத திரிபுக் கொள்ளைகளை உருவாக் கினார். ஆதாம் செய்த முதல் பாவத்தினால் மனிதன் தன்னிச்சையாக செயலாற் றும் உரிமையை இழந்துவிட்டான். ஆகவே, கடவுளுக்கு முழு அடிமையானான் எனக் கத்தோலிக்கப் போதனையான கடவுளின் அளவற்ற இரக்கத்திற்கும் மனித சுதந்திரத்திற்கும் எதிரான கருத்தை உருவாக்கி எவர் எவருக்கு மோட்சம், நரகம் எனக் கடவுள் ஏற்கனவே தீர்மானித்துள்ளார் என்ற பேதகத்தை எழுப்பி னார். அதுவும் எமது முயற்சியாலே கிட்டும். தெரிந்து கொள்ளப்பட்டவர் அழிந்து போவதில்லை. முடிவற்ற இயல்புடைய இறைவனே உண்மையான முகவர். மனிதர் அனைவரும் அவரது கருவிகள் என்பதே கல்வினசத்தின் அடிப்படை கொள்கை களாகும்.

## காத்தாரி திரிபுக்கொள்ளை

தொடக்ககாலத் திருச்சபையை பல திரிபுக்கொள்கைகள் திருப்பணி நிலை ஆயர்கள், மற்றும் குருக்கள் பலரால் தொடங்கப்பட்டதோடு பின்னர் பொது நிலை இறைமக்கள் மத்தியில் ஊக்குவித்து வளர்க்கப்பட்டவை என்றபோதிலும் காத்தாரி திரிபுக்கொள்கை உயர்மத்திய காலத்திலிருந்து சீர்திருத்தக் காலம்வரை சமூக பொருளாதாரமட்டத்தில் புறம்தள்ளப்பட்ட மக்கள் மத்தியில் தோற்றம் பெற்ற திரிபுக் கொள்கையாகும். மனிக்கேய திரிபுக்கொள்கையின் வாரிசான இவர்கள் தென் பிரான்ஸ், வடஇத்தாலிப் பகுதிகளில் பெரும்தொகை யாக காணப்பட்டனர்.

இறைமைவாதிகளான இவர்கள் நன்மை தீமை என்ற இரு நில்லைப்பாடு

களுக்கிடையிலான தொடர்ச்சிமிக்க போராட்டத்தில் சாத்தானால் உடல் ஆன்மா என்ற கலப்பு நிலை உருவாக்கப்படுகிறது. உடல்நிலைப்பாட்டை மறுத்த இவர்கள் இயேசுவின் மனிதவுடலேற்கை, திருமணம், உடல்உயிர்ப்பு என்னும் நம்பிக்கை ஆதாரங்களை ஏற்க மறுத்தது மட்டுமில்லாமல் இறைச்சி உணவுகளைக் கூட உண்ணாமல் விட்டனர். மேலும் இவ்வகை மறுப்பினால் அருளடையாளங்களையும் மற்றும் நரகம் பற்றிய மறைக்கோட்பாட்டையும் மறுத்தனர். வல்டேனெசியன் திரிபுக்கொள்கை போன்ற நற்செய்திசார் வறுமையை விரும்பியது போல் அமைந்தது. ஆயர்கள் பிரபுக்கள் வம்சத்திலிருந்து வருவதால் மக்கள் பார்வையில் இவ்வொப்பீடு மேன்மையானது போல் மக்கள் பார்வையில் உருவாகியது. காத்தார் திரிபுக்கொள்கைகள் வறுமையை இலட்சியமாகக் கொண்டதால் தூய பிரான்சிஸ்கு அசிசியின் கருத்து கூட தொடக்கத்தில் காத்தார் திரிபிக் கொள்கை என்று கூட கருதப்பட்டது.

இத்திரிபுக் கொள்கையின் எதிர்ப்புக்கு வறுமையை ஆதரிப்பது என்பது முக்கிய நிலைப்பாடல்ல. பொருள் உலகை மறுப்பதே பிரதான காரணமாகும். கிறிஸ்தவம் குறிப்பாக படைப்பு, இயேசுவின் மனிதவுடலேற்கை, அவரது சிலுவை மரணம் என்ற மீட்புத்திட்டத்தில் உலகம் இறைவனின் செயற்பாடுகளின் களமாகவே நம்பியது. பல பிரதேசங்கள் காத்தரிச திரிபுக்கொள்கையை மறுத்தபோதும் இறுதியில் 1215ல் இலத்தரன் பொதுச்சங்கம் இத்திரிபுக் கொள்கையைக் கண்டித்தது. குறிப்பாக திருத்தந்தை 3வது இனசென்ற் ஆதரித்த காத்தாரியாருக்கு எதிராக நடைமுறைப்படுத்திய உள்ளக சிலுவைப்போரில் பலர் கொல்லப்பட்டோடு மாசில்லாத மக்கள் பலர் இறந்தனர். இத்திரிபுக்கொள்கைக்கு எதிரான தூய தோமினிக்கின் ஆன்மீக முறையிலான முன்னெடுப்புக்கள் பலத்த பயனை அளித்தது.

பார்க்க:- அல்பிஜன் திரிபுக்கொள்ளை, கார்த்தார் திரிபுக்கொள்ளை, செபமாலை.

## கடவுள்

இச்சொல் தமிழ் சொல்லாகும். கடந்தவர் உள்ளே என்ற இரு ஏவல் வினையடியாகப் பிறந்தது.

## காடேஹ்

தோழுகைக்கூட வழிபாட்டில் யூதர்கள் அரமெய்க் மொழியில் சொல்லும் இறைபுகழ்ச்சி மன்றாட்டை காடேஹ் என அழைப்பர். தொடக்கச் சொல்லான அர்ச்சித்தல் என்பதே இதன் அர்த்தமாகும். இயேசு தமது சீடர்களுக்கு கற்பித்த மன்றாட்டு இதை அடியொற்றியதாக உள்ளது.

உமது சித்தப்படி உருவாக்கிய உலகில்
உமது பெயர் புனிதமென புகழப்படுக
உமது காலத்திலும் எமது நாட்களிலும்
இஸ்ரவேல் முழுவீட்டாரின் காலத்திலும்
வெகுவிரைவில் பிந்தாமலும் உமது அரசு
வருக ஆமென்.

## கர்த்தர்

யாவே என்ற சொல்லை கர்த்தர் என மொழி பெயர்த்தவர் சீகன்பால்கு ஐயராகும்.

## கார்த்திலா

1554ல் போர்த்துக்கால் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் தமிழ் ஒலியன்களை இலத்தீன் லிபியில் எழுதி அச்சடிக்கப்பட்ட முதல் தமிழ் நூலே கார்த்திலா என்னும் லூாசோ தமிழ் மறைக்கல்வி சிற்றேடாகும். போர்த்துக்கீச அரசன் 3வது யோனின் ஆணைப்படி லிஸ்பனிலிருந்த தமிழர்களான வின்சன் தே நசரத், யோர்ஜ் கார்வல்கோ, தோமஸ் தே குருசு என்பவர்களால் தமிழ் மொழியில் மொழி பெயர்த்துக் கொடுக்கப்பட்டது. பிரான்சிஸ்கன் மறைப் பணியாளரான யோ டி வில்லா கொண்ட அடிகள் தயாரித்த திருத்திய பதிப்பாகும். தமிழ்ச் செபங்களின் மொழிபெயர்ப்பையும், ஒவ்வொரு சொல்லுக்கும் நேரே போர்த்துக்கீச மொழியில் செந்நிறத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இந்நூல் லிஸ்பனிலுள்ள பெலேம் ஆவணக் காப்பகத்தில் உள்ளதாக முதன்முதலில் சொன்னவர் தமிழ்துாது தவத்திரு தனிநாயகம் அடிகள்.

## கி.பி. – கி.மு

தற்போது நடைமுறையிலுள்ள ADBC கிறிஸ்துவுக்கு முன், பின் என்ற யுகப்பிரிவு 754ம் ஆண்டில் ஜனவரி 1ம் திகதி ஆரம்பமாகியது. AD ஆண்டவரின் ஆண்டில் என்பதைக் குறிக்கும். யேசுவின் பிறப்பு தற்போதைய கணிப்பைவிட கி.மு. 7 அல்லது கி.மு 4 இடம்பெற்றிருக்கலாம் என ஆய்வாளர்கள் கணிப்பு உள்ளது. கிறிஸ்தவ யுகத்தைக் கணித்தவர் டயனீசியஸ் எக்சிகுவஸ் என்ற துறவியாகும். இவர் இத்தாலியில் வசித்தவர்.

## கிறிஸ்து அரசர் விழா

1925ம் ஆண்டில் வழிபாட்டு நாட்காட்டியில் கிறிஸ்து அரசர் விழாவை ஒக்டோபர் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடும்படி திருத்தந்தை 11ம்பியூ பணித்தார். வழிபாட்டு நாட்காட்டியில் உருவான சீர்திருத்தத்திற்குப்

பின்னர் இவ்விழா வழிபாட்டு ஆண்டின் பொதுக்காலத்தின் இறுதி ஞாயிறு கொண்டாடப்படுகிறது.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு எண்கிழமை

ஜனவரி 18 தூய பேதுருவின் ஆசனத்திருவிழா நாள் தொடங்கி 25 வதுநாள் தூய பாவிலு மனந்திரும்பல் திருவிழா நாள் வரையிலான நாட்களே கிறிஸ்தவ ஒன்றிப்பு எண்கிழமையாகும். ஆன்மீக ஒன்றிப்புக்காக மன்றாடும் இவ் எண்கிழமையை அமெரிக்க எப்பிஸ்கோப்பல் திருச்சபையின் அருள்திரு போல் வற்சனால் 1908 தொடங்கப்பட்டது. இவர் பரிகார சபையை தொடங்கியவர். அடுத்த ஆண்டளவில் இவரது சபையினரும் பிரதேச தலைவர்களும் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். திருத்தந்தை XXIII யோவான் இவ் எண்கிழமையை கத்தோலிக்க திருச்சபையில் கொண்டாட பணித்தார்.

## கிறிஸ்தவ புகுமுக நிலை (Catechumenate)

கிறிஸ்தவ புகமுக நிலை பயிற்சிப் பள்ளிகள் தொடக்கக் காலங்களில் திருச்சபையில் இருந்துள்ளன. 215ம் ஆண்டில் திருச்சபைத் தந்தையான கிப்பொலித்துஸ் தனது திருத்தூதுவ மரபு எனும் நூலில் விசுவாச மறை மெய்மைக்கு வழிநடத்தல் காலப் படிமுறைகள் பற்றி விவரித்துள்ளார். 3வது 4வது நூற்றாண்டுகளில் தபசு காலம் கிறிஸ்தவ புகுமுக நிலை ஆயத்த காலமாக காணப்பட்டது

புனித வார சனிக்கிழமை திருவிழிப்பின்போது திருமுழுக்கு அருளடையாளம் நிறைவேற்றும் வழக்கம் ஏற்பட்டது. ஜெருசலேம் நகர் சிறில், தூய அம்புறோஸ், தூய அகுஸ்தின் போன்ற திருச்சபைத் தந்தையர்களின் மறையுரைகள் ஆயத்த காலம் விசுவாச மறைமெய்மை, வழிநடத்தல் எனக்கருத வேண்டும். 2ம் வத்திக்கான் சங்கம் கிறிஸ்தவ புகுமுகநிலை (Catechumenate) ஆயத்தத்தை மீள்வலியுறுத்தியது.

கிறிஸ்தவ புகுமுக நிலை ஆயத்த காலத்தின் ஒவ்வொரு படிமுறை யையும் வழிபாட்டு பின்புலத்தில் நிகழ்ந்தது இதனால் திருப்பலியின் வார்த்தை வழிபாட்டுப் பகுதியை கிறிஸ்தவ புகுமுக நிலைத் திருப்பலி என அழைக்கும் வழக்கம் தொடக்கக் கால திருச்சபையில் இருந்துள்ளது. இறைவார்த்தை, மறையுரை, மன்றாட்டு முறைகள் கிறிஸ்தவ புகுமுக நிலையில் பயிற்றப்பட்டன..

# SYNOPSIS

## Eschatology in the perspective of St. Paul

Paul's understanding of the 2nd coming has to be comprehended on the basis of his Old Testament background. St. Paul is a Jew and a Pharisee, who had his understanding about the 2nd coming from the Jewish background. As far as the Jews are concerned the time can be divided into two. One is present and the other is the time which is yet to come. The present is full of evil and malice. During this period of time, the world is under the dominion of the evil spirit. The people will face temptation, suffering, lamentation and interruption.

It is very clear in the letter of St. Paul to the Ephesians which speaks of it vividly. Even though the Kingdom of God is present, yet it is in need of materialization. The predominant character in the letter of St. Paul to the Thessalonians is about the day of the final judgment, which can be also called the day of the Lord. The day of the Lord takes place between these two periods of time. On the day of the Lord, there will be the final battle between evil forces and God, and at last, God will win the battle, through which God will establish his reign. There will be natural calamities like earth quakes, volcanoes, and so on, and the dead will be raised to life. These are the signs of the coming of God's reign.

There was a turning point in the life of St.Paul, on the way to Damascus, where he met the risen Lord.

The time which we were expecting came to completion by the resurrection of Christ. The battle was fought between God and demon at Calvary. Even though the kingdom of God has come already, yet it is not completed.

We live in a time which falls between these two periods of time. the Messiah will redeem us from the tyranny of sin, and will enhance it with His love. The redeemed world will be perfected only by the love of the Messiah.

By His 2nd coming, Christ will bring all powers and authorities under his dominion. The entire redeemed world will be handed over to the Father and this will be called "Parousia". This 2nd coming of Christ will be also the first judgment on the whole humanity. Hence we are invited to be ready at every moment of life. And people who lead a blameless life will be ready to face the final judgment at any moment, but on the contrary people who lead a life of anti Christian values will be in the state of uncertainty.

The day of the Lord is uncertain as to when it takes place. Therefore we should not wait for the last moment to inculcate good values in our life, rather we should lead our lives absolutely based on faith and love.

---

# The important given to the women in the Pauline letters

"Greet Prisca and Aquila who works with me in Christ Jesus, and who risked their necks for my life....." (Rom. 16:3)

It is fitting to understand the great servant of the Lord, St. Paul especially in this Pauline year. The fundamentalists misquote and manipulate Paul's words in claiming their discrimination over women arguing that St Paul was against women.

As any other books of sacred scripture Pauline letters too have to be read in the context and with a clear picture of socio-religious problems of those churches to which Paul wrote his letters. For instance in the Corinthian church certain gentile women were misusing Christian freedom and this was reported to Paul by good disciples. Thus his admonition in (1 Cor 11:2-11)

is for a particular group and it should be never quoted to support male domination.

In fact St. Paul had a positive attitude towards women and they too contributed their best and supported him in his missionary endeavours. Phoebe, Prisca (Rom 16:1), Euodcia, Syntycha (Phil 4:2), Lydia (Acts 16:14), Nympha (Col 4:15), Lois, Eunice (2 Tim 1:5), are some of those women for whom Paul had great admiration. Thus the services of women are equally worthy in building the kingdom of God.

"My brothers and sisters, whom I love and long for, my joy and crown, stand firm in the Lord..." (Phil 4:1).

# The source of christian morality

The purity which Paul speaks of in First Thessalonians (4:3-5, 7-8) is manifested in the fact that man "knows how to control his own body in holiness and honour, not in the passion of lust." Purity consists in the first place in containing the impulse of sensitive desire, which has as its object what is corporeal and sexual in man. Purity is a different form of the virtue of temperance. The text of the First Letter to the Thessalonians (4:3-5) shows that in Paul's concept, the virtue of purity consists also in the mastery and overcoming of the passion of lust. It is not possible to "control one's body in holiness and honour" if that abstention from unchastity and from what leads to it, is lacking. Paul considers purity not only as a capacity (that is, an aptitude) of man's subjective faculties, but at the same time, as a concrete manifestation of life according to the Spirit. In this life, human capacity is interiorly made fruitful and enriched by what Paul calls in Galatians 5:22 the "fruit of the Spirit". The Pauline description of the human body in First Corinthians (1 Cor 12:18, 22-25) seems to be closely connected with the recommendations of the First Letter to the Thessalonians: "...that each one of you know how to control his own body in holiness and honour" (1 Th 4:4). This is an important thread, perhaps the essential one, of the Pauline doctrine on purity...

# The strategy Paul used in the proclamation of the gospel

The Pauline literature and the text of the Acts of the Apostles underscore various aspects of the personality of Paul, the Apostle. In this short article, we intend to draw the attention of readers to the missionary strategy that Paul used in the course of his ministry. His missionary vocation was the direct result of his encounter with Christ on the road to Damascus. His effort at imitating Christ who called him found expression in the work of proclamation that he ventured upon as a mystic, missionary, organizer and Pastor Paul is unparalleled in the missionary strategy that he followed. The missionary strategy that Paul evolved and practiced is of perennial value.

# *The Spirituality of St. Paul*

The Spirituality of St. Paul is very deep and liberates the whole human person. We can apply most of the Spirituality of Jesus' to St. Paul. St. Paul considered Jesus Christ as the model and followed him as much as he could. We can see this in the letters of St. Paul.

When me see the growth of spirituality in salvation history, there are many groups with different kinds of spirituality. such as the Spirituality of the Jews (Jewish Spirituality) the Spirituality of St. Paul and the Spirituality of the Catholic Church.

When we look into the Spirituality of St. Paul in special way we can understand the real life of St Paul in six ways :-

1. **The Spirituality of One God :**

St. Paul preached to all the communities that there is only one God who is the creator redeemer and sacrificer In his letters he often used the expression that all are children of the one God. At the beginning and end of his letters he praised God and asked his unceasing guidance.

2. **Spirituality of the Cross :**

On the proclamation of the good news of Jesus Christ St. Paul is the only one who faced lots of suffering and hardship. The Spirituality of St. Paul consists in facing all the challenges and witnessing to Jesus Christ as the one and only Saviour.

3. **Spirituality of walking with the Holy Spirit :**

In the life of St. Paul the Holy Spirit who was in control and guided him to do all things with courage and full of faith and confidence.

4. **Spirituality of accepting victory and defeat equally :**

When St. Paul was proclaiming the good news many of them were against him. They did not accept hiin but St. Paul accepts all the challengers positively.

5. **Spirituality of hope :**

St. Paul looks at every step with hope even though he faced many problems. The hope that he had is Jesus Christ.

6. **The Spirituality of the beloved Father and the merciful Shepherd :**

Whenever St. Paul meets people he behaved as a father to them and cared for them with affection like a shepherd.

There are many people in today's world who imitate St. Paul as their spiritual father and there are also many who are attracted by the powerful Spirituality of St. Paul.

# உங்கள் பங்கில் எங்கள் முகவர்கள்

| பங்கு | முகவர்கள் |
|---|---|
| 1. மானிப்பாய் | செல்வி அ.ஜெயசுதா |
| | செல்வன் சிவசங்கர் |
| 2. ஆனைக்கோட்டைப் பங்கு | சு.புஸ்பநாயகி |
| | பி. கவிதா |
| 3. நாவாந்துறைப் பங்கு | திருமதி செ.செல்வன் |
| | செல்வி ரூபா |
| 4. சுண்டிக்குளி பங்கு | செல்வி லூட் றொய்சியா லூர்துநாயகம் |
| | செல்வி றொயிற்றா சாந்தினி செல்வநாயகம் |
| 5. பாண்டியந்தாழ்வு பங்கு | திரு. மரியநாயகம் |
| 6. பாஷையூர் பங்கு | செல்வி றொ. தனூசியா |
| 7. அரியாலைப் பங்கு | செல்வி ஜெயா |
| 8. சக்கோட்டைப் பங்கு | செல்வி சு.நேசநாயகி (சுகி) |
| 9. உரும்பிராய் பங்கு | செல்வி டல்சி |
| | செல்வி இந்துசா |
| 10. குருநகர் பங்கு | செல்வி சகானா |

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 180/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 16
Euro 14

தனிப்பிரதி 55/=


தொடர்பு கொள்க:

**இறையியல் கோலங்கள்**

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2482, 021 222 7145


# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly
Annual Subscription: Local (Incl. postage) Rs. 180/=
Foreign (Incl. postage) U.S.$ 16
Euro 14
Single Copy Rs. 55/=


Correspondence to:

**Irai Iyal Kolangal**

St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel: 021 222 2482, 021 222 7145



Registered No. QD/95/News/2009

Design & Prit
Judeson